GENDER JUSTICE & SECURITY
A GCRF HUB

# பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு:

## கட்டமைப்பு ரீதியான சவால்கள், பெண்ணிய புத்தாக்கங்கள் மற்றும் முற்போக்குடைய எதிர்காலம்

அறிக்கையின் சுருக்கம்





# பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு: கட்டமைப்பு ரீதியான சவால்கள், பெண்ணிய புத்தாக்கங்கள் மற்றும் முற்போக்குடைய எதிர்காலம்

UKRI GCRF பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையம்

## அறிக்கையின் சுருக்கம்

© 2024, ஐக்கிய இராச்சிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்(UKRI) உலகளாவிய சவால்கள் ஆராச்சி நிதியம் (GCRF) பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையம். இதன் ஆக்கங்கள் NC 4.0 Creative Commons உரிமத்துடன் வெளிவருகின்றன. உரிமம் https://creativecommons.org/licenses/by-nc/4.0/. இல் கிடைக்கிறது. இந்த அறிக்கை மையத்தின் 150 உறுப்பினர்களால் இணைந்து எழுதப்பட்டது. மேலும் விவரங்களுக்கு, www. www.TheGenderHub.com இல் முழு அறிக்கையைப் பார்க்கவும். t.

இவ்வறிக்கையின் ஆசிரியர்கள் பேராசிரியர் கேர்ஸ்ரென் ஐன்லி மற்றும் பேராசிரியர் கிறிஸ்டின் சின்கின் ஆகியோருக்கு உரிம விதிமுறைகளுக்குப் மேலதிகமாக இவ்வறிக்கையைப் பயன்படுத்துவது குறித்த வினாக்கள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கவும் ஒட்டுமொத்த ஆசிரியர்கள் சார்பாக செயல்படுவதற்கும் உரிமம் வழங்குகிறார்கள். அவர்களை contact@thegenderhub.com அல்லது அவர்களின் நிறுவன மின்னஞ்சல் முகவரிகள் மூலம் தொடர்பு கொள்ளவும். படங்களுக்கான பதிப்புரிமை புகைப்படக் கலைஞர்களுக்குரியது.or on their institutional email addresses. Copyright for images remains with the photographers.

இந்த அறிக்கையின் சுருக்கமானது ஐக்கிய இராச்சிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்(UKRI) உலகளாவிய சவால்கள் ஆராச்சி நிதியம் (GCRF) மானிய எண் AH/S004025/1 மூலம் நிதியளிக்கப்பட்ட பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையத்தின் வெளியீடு ஆகும்.

Design: Claire Harrison and West9 Design. Illustrations: Hayfaa Chalabi. Printing: 4-Print Limited.

பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு: கட்டமைப்பு ரீதியான சவால்கள், பெண்ணிய புத்தாக்கங்கள் மற்றும் முற்போக்குடைய எதிர்காலம்

# அறிக்கையின் சுருக்கம்: முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

## உள்ளடக்கம்


**பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையம்** 2

**மையத்தின் அறிக்கை** 3

கட்டமைப்புரீதியான சவால்கள் 3

மையத்தின் ஆராச்சிக் கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும் 3

முன்னே காணப்படும் புதிய வழிகள் 11

மைய ரீதியான பிரதிபலிப்புகள் மற்றும் பரிந்துரைகள் 12


செயற்படலுக்கான குறிப்பிட்ட நாட்டுக்கான அழைப்புகள் 14

# பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையம்

பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மையம் உலகின் மிக அவசர அநீதிகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறது. மோதல்கள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் மீது பேரழிவு மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகின்றன. சர்வதேச ரீதியில் அபிவிருத்தி இலக்குகள் வெற்றிகரமாக அடையப்படுவதையும் அவை கடுமையாகத் தடுக்கின்றன. மையம் என்பது இந்த சவால்களை எதிர்கொள்வதற்கும் பாலின சமத்துவத்தில் நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) 5 ஐ அடைவதற்கும் நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG 16) அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள்; மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துதலுக்கும் முயற்சிக்கும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சிவில் சமூகம், பயிற்சியாளர்கள், அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றும் ஒரு பல்துறைஒருங்கிணைவைக் கொண்ட நாடுகடந்த ஆராய்ச்சி வலையமைப்பு ஆகும். 200 க்கும் மேற்பட்ட வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் உள்ளடங்கலான புதிய அறிவு மற்றும் வலைப்பின்னல்களை உருவாக்குவதன் மூலம் மையமானது பெண்கள் மற்றும் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் குரல்களை மேம்படுத்துவதுடன் உள்நாட்டு மற்றும் உலகளாவிய கொள்கை மாற்றம் மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை இயக்குகிறது..

மையமானது 40 க்கும் மேற்பட்ட கூட்டாளர் நிறுவனங்கள், 38 ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள 150 உறுப்பினர்களை உள்ளடக்கியது. அதன் புதுமையானது அதன் பல்துறைஒருங்கிணைவு லட்சியம், அதன் பெண்ணிய கட்டமைப்பு, அது உருவாக்கிய ஒப்பீட்டு பகுப்பாய்வுகளின் பரந்துபட்ட மற்றும் பாலின சமத்துவம் மற்றும் மோதலுக்குப் பிறகும் நிலையான நீதிக்கான முழுமையான அணுகுமுறையின் பார்வையில் தங்கியுள்ளது. முக்கிய பெண்ணிய ஆராய்ச்சி நெறிமுறைகளின் தொகுப்பால் வழிநடத்தப்பட்டு, பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்புக்கான லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் பள்ளி (LSE) மையத்தில் இருந்து நிர்வகிக்கப்படும் பாலின நீதி குறித்த முன்னணி உலகளாவிய அறிஞர்களின் நிர்வாகக் குழுவால் இம் மையமானது நிர்வகிக்கப்படுகிறது. உலகளாவிய சவால்கள் ஆராய்ச்சி நிதியம் (GCRF) ஊடாக ஐக்கிய இராச்சிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் (UKRI) மூலம் நிதியளிக்கப்பட்ட பன்னிரண்டு பல்துறைஒருங்கிணைவு ஆராய்ச்சி மையங்களில் இதுவும் ஒன்றாகும்.

பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு: கட்டமைப்புரீதியான சவால்கள், பெண்ணிய புத்தாக்கங்கள் மற்றும் முற்போக்கான எதிர்காலம் என்பன கருப்பொருள், கருத்திட்டம், நாடு மற்றும் மைய மட்டத்திலான மையத்தின் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் கருத்துக்கூட்டாக்கம் ஆகும். மையத்தின் உறுப்பினர்களால் ஒட்டுமொத்தமாக எழுதப்பட்ட இவ்வறிக்கையானது மைய மட்டத்திலான பகுப்பாய்வு மற்றும் பிரதிபலிப்புகள், ஆய்வுப்பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட மைய உறுப்பினர்களின் குரல்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை எடுத்துக்காட்டுகிறது. இது கட்டமைப்புரீதியான சவால்கள், மைய ஆராய்ச்சி மற்றும் முன்னோக்கி செல்லும் புதிய வழிகள் ஆகிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அவை ஒவ்வொன்றும் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. மையம் மற்றும் அதன் உறுப்பினர்கள் பற்றிய கூடுதல் தகவல்களை அதன் இணையதளத்தில் காணலாம்: www.TheGenderHub.com.



# மையத்தின் அறிக்கை

## கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள்

ஐக்கிய நாடுகள் சபையானது பாலின சமத்துவம், நீதி மற்றும் பாதுகாப்பை முன்னேற்றுவதற்கான விரிவான சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளதுடன் மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் சபையின் சிறப்பு நடைமுறைகளால் மேலும் விரிவாக்கப்பட்ட கடமைகளை அரசுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, பாலின நீதி மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடிய அமைதிக்கு வழிவகுக்கும் 21 ஆம் நூற்றாண்டில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் உட்பட கொள்கை முன்முயற்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் இன்றுவரையிலும் எந்த நாடும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றும் போக்கில் இல்லை என்பதுடன் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் (UNSC) சமகால மோதல்களில் அதன் சொந்த பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலைக் கூட செயல்படுத்த முடியவில்லை. மேற்கொள்ளப்பட்ட மையத்தின்ஆராய்ச்சியில் மோதலால் பாதிக்கப்பட்ட சூழல்களில் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மேம்பாடுகளை அடைவதைத் தடுக்கும் கட்டமைப்புத் தடைகளை அறிக்கையின் பிரிவு ஒன்று ஆராய்கிறது. இப்பகுப்பாய்வானது ஆணாதிக்கம், முதலாளித்துவம், காலனித்துவம் மற்றும் இராணுவமயமாக்கல் ஆகியவை இணைந்து மோதல் மற்றும் நெருக்கடியின் பாலின தன்மையினை வடிவமைக்கின்றது. இது மையம் மூலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிக்கு விரோதமான சூழலை உருவாக்கி பாலின முரண்பாடுகளைத் தக்கவைத்து பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு நோக்கிய முன்னேற்றத்தைத் தடுக்கும் வழிகளை உருவாக்குகின்றது.

## மையத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

இவ் அறிக்கையின் பிரிவு இரண்டு, மையத்தின் பணிகளை இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்கிறது. மையத்தின் ஆராய்ச்சியானது ஆறு ஆராய்ச்சி கருப்பொருள்களின் கீழ் 38 சுயாதீன திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டது: நிலைமாற்றம் மற்றும் வலுப்படுத்துதல்; வாழ்வாதாரம், நிலம் மற்றும் உரிமைகள்; ஆண்மை மற்றும் பாலியல்; புலம்பெயர்வு மற்றும் இடப்பெயர்வு; சட்டம் மற்றும் கொள்கை வரைச்சட்டங்கள்; மற்றும் ஆய்வுமுறைசார் புத்தாக்கம். ஆப்கானிஸ்தான், கொலம்பியா, குர்திஸ்தான்-ஈராக், லெபனான், சியரா லியோன், இலங்கை மற்றும் உகாண்டா ஆகிய ஏழு நாடுகளுடன் சேர்த்து ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியா முழுவதும் பன்னிரெண்டுக்கும் அதிகமான நாடுகளில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அத்தியாயம் மூன்றானது மையம் கவனம் செலுத்தும் நாடுகள் ஒவ்வொன்றினதும் முக்கிய சவால்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை கோடிட்டுக் காட்டுவதன் மூலம் மையத்தின் பணியை புவியியல் ரீதியாக நிலைநிறுத்துகிறது. நான்கு முதல் ஒன்பது வரையிலான அத்தியாயங்கள் ஒவ்வொரு ஆராய்ச்சி பிரிவிலும் உள்ள முக்கிய கேள்விகளைக் கோடிட்டுக் காட்டுவதுடன் அதன்பின்னர் ஆராய்ச்சி பிரிவுகளில் உள்ளடங்கியுள்ள மையத்தின் அனைத்து திட்டங்களின் தலைப்புகள், முறைகள், கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்கங்களை வழங்குகின்றன. ஒவ்வொரு ஆராய்ச்சி பிரிவிலிருந்தும் வெளிவரும் முக்கிய பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### பாலினம், நீதி மற்றும் பாதுகாப்பு மைய ஆராய்ச்சி கட்டமைப்பு

| RESEARCH STREAM | REPORT SECTION | PROJECT | COUNTRY CASES |
|---|---|---|---|
| Transformation and Empowerment | 4.2 | Addressing Post-Colonial Legacies in Transitional Justice | Colombia, Northern Ireland |
| | 4.3 | Culture and Conflict | Afghanistan, India, Pakistan, Sri Lanka |
| | 4.4 | Gender, Governance and Peacebuilding | Jordan, The Philippines, Sri Lanka |
| | 4.5 | Legacies of the Disappeared | Colombia, Sri Lanka |
| | 4.6 | Political Economy of Reconciliation | Colombia |
| | 4.7 | The Potentialities and Politics of Transformation | Sri Lanka |
| | 4.8 | Social and Economic Rights in Transition | Northern Ireland |
| | 4.9 | Women's Political and Economic Empowerment | Colombia |
| | 4.10 | Women's Rights after War | Bosnia-Herzegovina, Colombia, Iraq, Nepal, Sri Lanka, Rwanda |

| RESEARCH STREAM | REPORT SECTION | PROJECT | COUNTRY CASES |
|---|---|---|---|
| **Livelihood, Land and Rights** | 5.2 | Beyond War Compensation | Uganda |
| | 5.3 | Land Policy, Gender and Plural Legal Systems | Sierra Leone |
| | 5.4 | Land Reform, Peace and Informal Institutions | Colombia |
| | 5.5 | When Women Do Not Own Land | Sri Lanka |
| **Masculinities and Sexualities** | 6.2 | Changing SOGIE in Conflict, Peace and Displacement in the MENA Region | Lebanon, Turkey, Syria |
| | 6.3 | Cross-Border Wars, Sexuality and Citizenship | Uganda |
| | 6.4 | Men, Peace and Security | Cross-Cutting |
| | 6.5 | Sex, Love and War | Uganda |
| | 6.6 | Sexuality, Work and Gender Relations in Peacekeeping Missions | Bosnia, Democratic Republic of the Congo, Sierra Leone, South Sudan |
| | 6.7 | Transitional Masculinity, Violence and Prevention | Kurdistan-Iraq |
| **Migration and Displacement** | 7.2 | Gender and Forced Displacement | Afghanistan, Kurdistan-Iraq, Pakistan, Sri Lanka, Turkey |
| | 7.3 | Gendered Dynamics of International Labour Migration | Kurdistan-Iraq, Lebanon, Pakistan, Turkey |
| | 7.4 | Return, Reintegration and Political Restructuring | Afghanistan, Kurdistan-Iraq, Pakistan, Sri Lanka |
| **Law and Policy Frameworks** | 8.2 | Donor Funding and WPS Implementation | Colombia, Nepal, Northern Ireland |
| | 8.3 | Feminist Security Politics | Cross-Cutting |
| | 8.4 | Funding Transitional Justice | Cross-Cutting |
| | 8.5 | Gender and Conflict Transformation | Cross-Cutting |
| | 8.6 | Gender and Transitional Justice in Sri Lanka | Sri Lanka |
| **Methodological Innovation** | 9.2 | From Female Combatants to Filmmakers | Colombia, Uganda |
| | 9.3 | The Global Wellbeing and Resilience Index | Cross-Cutting |
| | 9.4 | Innovative Methodologies and Methodological Innovation | Cross-Cutting |
| | 9.5 | Narrating (In)Security | Sri Lanka |
| | 9.6 | Rights Research with Social Media | Cross-Cutting |
| | 9.7 | The Stories of Research | Cross-Cutting |

## நிலைமாற்றமும் வலுப்படுத்தலும்



பல முரண்பட்ட மற்றும் மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில் நடைமுறை மற்றும் நிறுவன ரீதியாக வலுப்பெற விரும்புபவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் யார் வலுப்பெறுகிறார்கள், எப்படி வலுப்பெறுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டு, இந்த ஆய்வுப்பிரிவின் கவனமானது மோதலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குள் 'நிலைமாறும் நீதி' மற்றும் 'வலுப்படுத்துதல்' ஆகிய கருத்துகளை ஆராய்வதாகும்.

- **பெண்களின் உரிமைகள் சீர்திருத்தங்களின் போதாமை மற்றும் போதிய நிறுவன நிலைமாற்றமின்மை:** சட்ட மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் பெண்களின் உரிமைகளை நிவர்த்தி செய்யும் நிறுவன மாற்றங்கள் மோதல் சூழல்களில் போதுமானதாக இல்லை என்பதுடன் அவை ஒன்றிலொன்று தொடர்புபட்ட பகுப்பாய்வுகளை இணைக்கத் தவறிவிட்டன.

- **நிலைமாறுகால நீதியில் காலனித்துவ மரபுகள்:** சமூகத்தின் பல்வேறு அம்சங்களில் பெண்கள் மற்றும் ஆண்களின் ஈடுபாட்டின் மீதான நீண்டகால கட்டமைப்பு தாக்கத்தை அங்கீகரித்து, காலனித்துவ மரபுகளுக்கு நிலைமாறுகால நீதி வழிமுறைகள் தீர்வு காண வேண்டும்.

- **நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் விருப்பமின்மை குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றது:** வரலாற்று அநீதிகளை நிவர்த்தி செய்வதற்கும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் ஒருங்கிணைந்த இந்த வழிமுறைகள், அரசியல் சக்திகளால் உருவாக்கப்பட்ட துருவப்படுத்தப்பட்ட சூழலின் காரணமாக அடிக்கடி எதிர்ப்பைச் சந்திக்கின்றன. இதன் விளைவாக, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் தீர்வுகள் நிறைவேற்றப்படாமல் உள்ளமை நிலைமாறுகால நீதியை திறம்பட செயல்படுத்துவதற்கு ஒரு முக்கியமான தடையாக உள்ளது.

- **நல்லிணக்கத்தின் சிக்கல்கள்** மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில் நல்லிணக்கம் என்பது சிக்கலானதுடன் பல அடுக்குகளைக் கொண்டது. சமரச முயற்சிகள் வயது, பாலினம் மற்றும் எதிர்கொண்ட பழிவாங்கல்கள் போன்ற காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகள் முக்கியமானவை.

- **பெண்களின் குரல்களின் மையக்கருத்து:** போருக்குப் பின்னர் இடம்பெறும் மாற்றங்கள் மற்றும் தலையீடுகளின் மையமாக பெண்களும் அவர்களின் குரல்களும் கருதப்பட வேண்டும். பெண்கள், சமாதானம், பாதுகாப்பு (WPS) மற்றும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் (SDGs) போன்ற சர்வதேச நிகழ்ச்சி நிரல்களுடன் இணைந்து, பெண்கள் முகவராண்மையை அங்கீகரிப்பதும், நீதி மற்றும் பாதுகாப்பில் அவர்களின் பங்குபற்றலும் மிகவும் முக்கியமானதாகும்.

- **மோதல் தொடர்பான சிரமங்களை நிவர்த்தி செய்வதில் கலாச்சாரத்தின் பயன்பாடு:** கலாச்சார முயற்சிகள் பெண்களுக்கான இழப்பீடு, குணப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல், அவர்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான பங்களிப்பு மற்றும் பெண்களின் இயக்கங்களை வலுப்படுத்துவதற்கான ஆதாரமாக செயல்படும்.

- **கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் தாக்கம்:** ஆராய்ச்சி மற்றும் நடைமுறையில் முன்னேற்றம் இருந்தபோதிலும், கொவிட் -19 பெருந்தொற்றுநோய் குறிப்பிடத்தக்க பின்னடைவைக் குறிக்கிறது. இது பாலின சமத்துவத்தை அடைவதற்கான பாதையை மாற்றி தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகள் முன்னேற்றப்பாதையில் செல்வதற்குப் பதிலாக பின்னடையச் செய்துள்ளது.

## வாழ்வாதாரம், நிலம் மற்றும் உரிமைகள்



இந்த ஆராய்ச்சிப்பிரிவானது நிலைமாறுகால நீதி, பாலின அதிகார உறவுகள் மற்றும் சமூக-பொருளாதார உரிமைகள், குறிப்பாக நிலம் மற்றும் சொத்து ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளை மையப்படுத்துகிறது. இந்த ஆராச்சியானது மோதல்களுக்குப் பின்னர் பெரும்பாலும் குடும்பத் தலைவர்களாக உருவாகும் பெண்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களையும் முன்பே இருக்கும் பாகுபாடு மற்றும் விலக்கு காரணமாக சொத்து உரிமை மற்றும் நிலத்தை பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிக்கல்களையும் பரிசீலனை செய்கின்றது. இவ் ஆராய்ச்சிப்பிரிவின் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு:

- **சட்டப் பன்மைத்துவம் மற்றும் அமுலாக்க இடைவெளிகள்:** வழமைகள் மற்றும் பொதுச் சட்டங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுவதானது அவற்றின் அமுலாக்கத்தில் இடைவெளிகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன. அவ் இடைவெளிகள் பெண்களுக்கு அளவுக்கு மீறிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. சட்ட சீர்திருத்தம் மற்றும் கலாச்சார மாற்றம் தேவையாகக் காணப்படுவதுடன் பெண்களின் உரிமைகள் நிலைநாட்டப்படுவதனை உறுதிசெய்வதற்கு அதிக விழிப்புணர்வும் அவசியமானதாகும்.
- **பாரம்பரிய மற்றும் முறைசாரா நிறுவனங்களின் வகிபாகம்:** குறிப்பாக மோதலுக்குப் பின்னரான சூழ்நிலைகளில் பாரம்பரிய மற்றும் முறைசாரா நிறுவனங்கள் நிலத் தகராறுகளை மத்தியஸ்தம் செய்வதற்கும் பெண்களின் உரிமைகளை ஆதரிப்பதற்கும் குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்டுள்ளதன் மூலம் பாலின நீதி மற்றும் சமூக ஒற்றுமையை மேம்படுத்துகிறன.
- **நிலைமாறுகால நீதி மற்றும் காணி மீளளிப்பில் உள்ள சவால்கள்:** குறிப்பாக காணி மீளளிப்பு தொடர்பாக நிலைமாறுகால நீதி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது சிக்கலானதாகும். வலுவான நிறுவன கட்டமைப்புகள் மற்றும் மிகவும் வெளிப்படையான செயல்முறைகள் சட்டத்திற்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவும்.
- **பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக நல்வாழ்வு:** பெண்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு நில உரிமை மிகவும் முக்கியமானது. பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கு நிலத்தை பெற்றுக்கொள்வது மற்றும் நில உரிமை தொடர்பான தடைகளை நிவர்த்தி செய்வது அவசியமாகும்.
- **ஆணாதிக்க கட்டமைப்புகள் மற்றும் கலாச்சார நியமங்கள்:** ஆணாதிக்க கட்டமைப்புகள் மற்றும் கலாச்சார நியமங்கள் பெண்களின் நில உரிமைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்நியமங்களை மாற்றுவதற்கும் நில நிர்வாகத்தில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்குமான முயற்சிகள் முக்கியமானவை.
- **கொள்கை மற்றும் ஆட்சிச்செயன்முறை சீர்திருத்தங்கள்:** நியாயமான விதத்தில் நிலத்தை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு கொள்கை மற்றும் ஆட்சிச் செயன்முறை சீர்திருத்தங்கள் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பெண்களை ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தேவை.
- **விழிப்புணர்வு மற்றும் வாதாடல்:** சமூக ஈடுபாடு மற்றும் பலதரப்பட்ட செயற்பாட்டாளர்களுடன் உரையாடல் மூலம் பெண்களின் நில உரிமைகளுக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் வாதாடுவதும் இன்றியமையாதது. இது சட்ட உதவி மற்றும் நிலத் தகராறுகளைத் தீர்க்கும் வழிமுறைகளை முன்னெடுக்கும் பெண்களின் நடவடிக்கைகளுடன் இணைந்ததாக இருக்க வேண்டும்.


## ஆண்மை மற்றும் பாலியல்



ஆண்மை மற்றும் பாலியல் ஆராய்ச்சிப் பிரிவானது ஆண்மை, பாலுணர்வு மற்றும் வன்முறை ஆகியவற்றின் கட்டுமானங்களில் காணப்படும் வெவ்வேறு கண்ணோட்டங்களை பரிசீலிப்பதுடன் அவை உருவாகும் வழிகளையும் மோதல் மற்றும் பிராந்தியத்தால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்ற விதத்தினையும் ஆராய்கின்றது.

- **உரையாடல் மற்றும் கவனக்குவிய குழு விவாதங்கள் ஊடான பிரதிபலிப்பு:** வன்முறை, ஆண்மை மற்றும் பாலினம் தொடர்பான பிரச்சனைகளின் சமூக இயக்கவியல் பற்றிய பிரதிபலிப்பு, விமர்சன சிந்தனை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை ஊக்குவிப்பதில் சமூக உரையாடல் மற்றும் கவனக்குவிய குழு விவாதங்களை வளர்ப்பது அவசியம்.
- **சமூக உடைமை:** வெளிப்புற சூழல்கள் மூலம் தீர்வுகளை உருவாக்குவதை விட சமூகத்திற்குள் தீர்வுகள் உருவாக்கப்படுவது முக்கியமானதாகும். உள்ளூர் கலாச்சார மற்றும் மதத் தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தலைமையிலான சமூக அளவிலான உரையாடல்கள், சமூக நியமங்கள் மற்றும் பாலின அடிப்படையிலான பிரச்சினைகள் மற்றும் சமூகம் தலைமை தாங்கும் தீர்வுகளைக் கையாள்வதற்கு அவசியமானதாகும்.
- **படைப்பாற்றல்மிக்க வெளிப்படுத்தல்கள் மூலம் வலுப்படுத்துதல்:** கவிதை எழுதும் பட்டறைகள் மற்றும் புகைப்பட உரை நடவடிக்கைகள் போன்ற பல்வேறு படைப்பாற்றல்மிக்க முறைகள் சுய வெளிப்பாட்டை ஊக்குவிப்பதிலும் ஒரே மாதிரியான சிந்தனைகளை சவாலுக்கு உட்படுத்துவதிலும் சமூகப் பிரச்சினைகளில் பிரதிபலிக்க உதவுவதிலும் செயற்றிறன் வாய்ந்தவையென நிரூபிக்கப்பட்டுள்ளது.
- **திறன் மேம்பாடு மற்றும் கொள்கை மாற்றம்:** முறையான மாற்றம் மற்றும் பாலின உணர்திறனை ஊக்குவித்தல் என்பன மீது செல்வாக்குச் செலுத்தும் நோக்குடன் திறன் மேம்பாடு மற்றும் கொள்கை பரிந்துரைகளுக்காக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுடன் இணைந்து செயல்படுவது செயற்றிறனான வழியாக இருக்கும். எவ்வாறாயினும், பெரும்பாலும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகள் மற்றும் சமூக அழுத்தங்கள் காரணமாக மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கும் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அரசாங்க நிறுவனங்களுக்குள் இருக்கும் பெரும் தயக்கத்தை ஒப்புக்கொள்வது முக்கியமானது.
- **பல்துறை ஒருங்கிணைவு அணுகுமுறை:** பாலினம் மற்றும் வன்முறை போன்ற சமூகப் பிரச்சினைகளை பல்துறை ஒருங்கிணைவுப் பார்வை மூலம் ஆராய்வது மிகவும் முக்கியமானது. ஏனெனில் அது ஆழமான பிரச்சனைகளின் மூல காரணங்களில் மிகவும் துல்லியமான மற்றும் ஆற்றல்மிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது. கூடுதலாக, துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பது முன்னோக்குகளை வளப்படுத்தவும், ஒவ்வொரு திட்டத்தின் ஒட்டுமொத்த தாக்கத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. அதே நேரத்தில் நகல் முயற்சிகள் அகற்றப்படுவதை உறுதிசெய்கிறது.
- **ஒருங்கிணைந்த பிரதிபலிப்புக்கள்:** பாலின சமத்துவத்தை அடைவது அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆர்வலர்களின் பொறுப்பு மட்டும் அல்ல பரந்துபட்ட சமூகத்தின் ஈடுபாடு இல்லாமல் அது சாத்தியமில்லை. ஒரு செயற்றிறனான அணுகுமுறையானது அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனத் துறை, நிதியளிப்பவர்கள் மற்றும் நன்கொடையாளர்கள், ஊடகங்கள் மற்றும் பரந்த சமூகத்தின் ஒருங்கிணைந்த பிரதிபலிப்புக்களை வேண்டிநிற்கின்றது.
- **கொவிட்-19 இன் தாக்கம்:** உலகளாவிய பெருந்தொற்றுநோயானது பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்ட பெண்கள் மற்றும் பலதரப்பட்ட பாலியல் நோக்குநிலை கொண்டவர்களுக்கு எதிரான பாலின அடிப்படையிலான வன்முறையை அதிகரித்துள்ளது.

## புலம்பெயர்வும் இடம்பெயர்வும்



இந்த ஆராய்ச்சிப்பிரிவில் உள்ள திட்டங்கள், மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவில் பல்வேறு வகையான உள்நாட்டு மற்றும் சர்வதேச இடப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வு ஆகியவற்றின் பாலின அம்சங்களைப்பற்றி பகுப்பாய்வு செய்து, சர்வதேச மட்டத்தில் மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டத்தை நோக்கிய உரையாடல்கள் மற்றும் முன்முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட பாலின பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கொள்கைகளை உருவாக்குவதுடன் சமூக குழுக்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளுடன் கூட்டிணைந்து செயற்படுவதற்குமான பரிந்துரைகளை வழங்குகின்றன. ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து கிடைக்கும் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு:

- **சுகாதாரம் மற்றும் கல்வியில் பாலின ஏற்றத்தாழ்வு:** அனைத்து சூழல்களிலும் சுகாதாரம் மற்றும் கல்வியில் ஆழமான பாலின வேறுபாடுகள் உள்ளன. மேலும் இடம்பெயர்ந்த குழுக்கள் சுத்தமான நீர், சுகாதாரமான வாழ்க்கை நிலைமைகள் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் ஆகியவற்றை குறைவாகவே பெறுகின்றனர்.

- **பயிற்சி மற்றும் தொடர்பாடல்:** கட்டாய இடப்பெயர்வு, நாடு திரும்புதல் மற்றும் புலம்பெயர்வு தொடர்பான கொள்கைகளில் பாலின பகுப்பாய்வின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதற்கு சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கு சர்வதேச அளவில் பாலினம் சார் விடயங்களைக் கவனத்திற் கொள்ளும் கொள்கைகளில் சிறந்த பயிற்சி மற்றும் தொடர்பாடலும் தேவையானதாகும்.

- **கொள்கை அமுலாக்கம்** பாலினம் சார் கொள்கைகள் மற்றும் கட்டாய இடப்பெயர்வு குறித்த பயிற்சி தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட வேண்டும்.

- **புலம்பெயர்ந்து சொந்த நாட்டிற்கு திரும்பிவருவதற்கான உந்துதல்:** புலம்பெயர்ந்த நாட்டில் காணப்படும் மோசமான வாழ்க்கை நிலைமைகள், இனவெறி மற்றும் பாகுபாடு (COVID-19 இன் போது அதிகரித்தது) மற்றும் சொந்த நாட்டில் காணப்படும் மேம்பட்ட அல்லது உறுதியான நிலைமைகள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவதனை ஒன்றில் சாத்தியமானதாக அல்லது இலாபகரமானதாக அல்லது இரண்டும் சேர்ந்ததாக ஆக்கக் கூடும்.

- **புலம்பெயர்ந்து சொந்த நாட்டிற்கு திரும்புவது தொடர்பான கொள்கைகளும் உதவியும் போதாமல் இருப்பது:** புலம்பெயர்ந்து சொந்த நாட்டிற்கு திரும்புவது தொடர்பான புலம்பெயர்வுக் கொள்கைகள் மற்றும் உதவி போதாமல் இருப்பதுடன் தொழிலாளர் சந்தை வாய்ப்புகள் மற்றும் வீட்டுவசதி மற்றும் கல்வி என்பவற்றைப் பெறுவதில் வரையறைகள் காணப்படுவதானது சில புலம்பெயர்ந்தோர் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புவதைத் தடுக்கிறது.

- **ஆட்சேர்ப்பு முகவர்களின் அதிகாரம்:** குறிப்பாக சட்டவிரோத பண அனுப்புதல் முறைகளை ( உண்டியல் /கவாலா) கொண்ட லெபனான் போன்ற நாடுகளில் ஆட்சேர்ப்பு முகவர்கள் புலம்பெயர்வினை ஏற்பாடு செய்வதிலும் புலம் பெயர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டுள்ளனர்.

- **ஏற்றத்தாழ்வும் வன்முறையும்:** புலம்பெயர்ந்த சூழல்களில் பெண்கள் தொடர்பான முகவரகங்கள், கட்டமைப்புரீதியான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வன்முறைகள் தொழிலாளர் சந்தைகளில் பெண்கள் பங்கேற்கும் திறனைத் தடுக்கிறன.

- **ஆராய்ச்சிகளில் காணப்படும் இடைவெளிகள்:** உலகின் தென்பிராந்திய நாடுகளில் பாலின அடிப்படையிலான குடியேற்றத்தின் பன்முகத்தன்மை குறித்து கூடுதல் ஆராய்ச்சிகள் தேவையானதாகும். அத்துடன் தற்போது காணப்படும் நியம தொழிலாளர் சட்டங்களின் கீழ் இல்லாத வீட்டுப் பணியாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை மேம்படுத்த அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சூழ்நிலைகளில் புலம்பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் தனித்துவமான தேவைகளை நன்கு புரிந்து கொள்வதற்காக சமூக குழுக்களுடன் இணைந்து இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.


## சட்டம் மற்றும் கொள்கை கட்டமைப்புகள்



உலகின் வடக்கு மற்றும் தென்பிராந்திய நாடுகளில் சர்வதேச அளவில் ஊக்குவிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, உள்நாட்டு-சர்வதேச கொள்கை இணைப்புகளில் இந்த ஆராய்ச்சிப்பிரிவு கவனம் செலுத்துகிறது. திட்டங்கள், நன்கொடையாளர் கொள்கைகள், நிறுவன கட்டமைப்புகள் மற்றும் இடைக்கால நீதி மற்றும் பெண்கள் சமாதனம் பாதுகாப்பு மீதான நிதிக் கோலங்களின் விளைவுகள் பற்றிய தொகை மற்றும் பண்பு ரீதியான தரவுகளைச் சேகரிப்பதுடன் மாற்றமுறும் மோதல் தீர்வு மற்றும் பாலின-உணர்திறன் பாதுகாப்புக் கொள்கைகளின் இன்றைய பதிவையும் பரிசீலிக்கின்றன. ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து கிடைக்கும் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு:

- **பாலினம் என்பது “சேர்ப்பு” அல்ல (அல்லது பெண்களுக்கான இணைச்சொல்லுமல்ல):** பல சந்தர்ப்பங்களில் பாலினம் தொடர்பான பார்வைகள் இன்னும் ஓரங்கட்டப்படுகின்றன, பாலின ரீதியாக பிரிக்கப்பட்ட தரவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. அத்துடன் சமாதானம் மற்றும் நீதி செயல்முறைகளின் “பாலின பரிமாணம்” பெண்களை உள்ளடக்கியது என்று அனுமானம் உள்ளது.
- **கொள்கையின் பாலினம்சார் தாக்கங்கள்:** பாலின நீதிக்கான வெளிப்படையான முன்னுரிமை மற்றும் சர்வதேச அளவில் பாலினத்தின் பாலின தாக்கங்கள் குறித்த அக்கறை இருந்தபோதிலும், அதிகப்படியான உள்நாட்டு மற்றும் சர்வதேச கொள்கை மற்றும் நடைமுறைகள் இன்னும் ஆழமான பாலின தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.
- **மொழி முக்கியமானது:** பெண்கள் சமாதானம் பாதுகாப்பின் ‘கொள்கைச் சூழல் அமைப்பால் முடியுமா அல்லது அத்தகைய பகிரப்பட்ட அர்த்தங்களைச் சுற்றி சீரமைக்கப்பட வேண்டுமா
- என்பது குறித்த ஆரோக்கியமான சந்தேகத்தை இழக்காமல், ‘நீதி’, ‘அமைதிகாலம்’ மற்றும் ‘மோதலுக்குப் பின்னரான நிலைமை’ போன்ற முக்கிய கருத்துக்கள் பற்றிய பகிரப்பட்ட புரிதல்களுக்கு கொள்கை வகுப்பாளர்களை சமூகமயமாக்குவது முக்கியமானதாகும்.
- **மௌனமும் முக்கியமானது:** கொள்கை விவாதங்களில் யார் பேசவும் கேட்கவும் முடியும், எதைப் பற்றி பேசுவதற்கு தெரிவு செய்கிறார்கள், எந்த நபர்கள் மற்றும் தலைப்புகள் மௌனமாக்கப்படுகின்றன என்பது பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்.
- **உள்ளூர் குரல்களைக் கவனமாகக் கேளுங்கள்:** மோதல்கள் மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட நிலைமைகளில், அமைதி மற்றும் நீதிக்காக உள்ளூரில் பணியாற்றும் நிறுவனங்கள் அறிவாற்றல் உடையவை என்பதுடன் அவை மதிக்கப்படவும் வேண்டும். அதிகாரம் தொடர்பான சமநிலையின்மைகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை ஆகியவை உள்ளூர் நிறுவனங்களை அளவிற்கொவ்வாத விதத்தில்பாதித்து அவர்களின் முடிவெடுக்கும் பரப்பினைக் கட்டுப்படுத்தி உலகின் வடபிராந்தியத்திலுள்ளவர்களுக்கு சிறப்புரிமைகளை வழங்குகின்றன.
- **உள்ளூர்-தேசிய-உலகளாவிய தொடர்பின்மை:** முக்கிய கொள்கை கட்டமைப்புகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச அம்சங்கள் பெரும்பாலும் நன்கு இணைக்கப்படவில்லை என்பதுடன் உள்நாட்டு செயற்பாட்டாளர்கள் தங்கள் அன்றாட செயற்பாடுகளில் பெண்கள் சமாதானம் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் போன்ற சர்வதேச கட்டமைப்புகளை அவசியம் பயனுள்ளவையாகக் காணவில்லை.
- **பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் பங்கேற்பு நிதி:** சர்வதேச செயற்பாட்டாளர்கள், குறிப்பாக நன்கொடையாளர்கள், நீதி மற்றும் சமரசப் பணிகளில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டுள்ள போதிலும் நிதியுதவி குறித்த தரவுகளைப் பெறுவதென்பது மோசமாக உள்ளது.

## ஆய்வுமுறையியல் புத்தாக்கம்



இந்த திட்டங்கள் புதுமையான வழிமுறை முன்னேற்றத்தின் மூலம் மிகவும் நெகிழ்ச்சியான, நியாயதன்மைவாய்ந்த மற்றும் அமைதியான சமூகங்களுக்கு பங்களிப்புச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அவை எப்போதும் வலுவான நெறிமுறை மற்றும் பாதுகாக்கும் கொள்கைகளை கடைபிடிக்கும் அதே வேளையில் மாறும் சூழல்களுக்கு ஏற்றவாறு பெண்ணிய பங்கேற்பு மற்றும் கூட்டு அணுகுமுறைகளை உருவாக்குகின்றன. ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து கிடைக்கும் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு:

- **பிரதிபலிப்பு மற்றும் உறவுமுறை:** இந்த துறையில் ஆராய்ச்சி செய்வதற்கு பிரதிபலிப்பு மற்றும் உறவுமுறை மிகவும் முக்கியமானது. ஆய்வுமுறைகள் சூழல்நிலைக்கு ஏற்றதாகவும், மோதல் தொடர்பான விடயங்களில் உணர்திறன் கொண்டதாகவும், கவனமுடையனவாகவும் ஒத்துழைப்பனவாகவும் இருக்க வேண்டும். ஆராய்ச்சியாளர்கள், அறிவு உருவாக்கத்தின் கூட்டுத் தன்மையை உணர்ந்து, தாங்கள் பணியாற்ற விரும்பும் சமூகங்களுடன் இணைந்து ஆய்வுகளை வடிவமைத்து செயற்பட வேண்டும்.
- **ஆராய்ச்சி மீதான நெருக்கடிகளின் தாக்கம்:** கொவிட்-19 பெருந்தொற்றுநோய், வரவுசெலவுத்திட்ட செலவுக் குறைப்புக்கள் மற்றும் அரசியல் எழுச்சிகள் போன்ற நெருக்கடிகள் ஆராய்ச்சி முறைகள் மற்றும் நெறிமுறை கட்டமைப்புகளின் நெகிழ்வுத்தன்மையைச் பரிசோதிக்கின்றன. இந்த சவால்களுக்கு ஏற்ப மாற்றமுறவும் பதிலளிக்கவும் ஆராய்ச்சியாளர்கள் தயாராக இருக்க வேண்டும்.
- **புத்தாக்கம்வாய்ந்த ஆய்வுமுறைகள்:** பங்கேற்புடனான திரைப்படம் தயாரித்தல் மற்றும் கலை சார்ந்த அணுகுமுறைகள் அல்லது ஆராய்ச்சித் திட்டத்தில் பொதுவாகப் பங்கேற்க முடியாத நபர்களுடன் நிகழ்நிலை நேர்காணல்களை நடத்துதல் போன்ற புத்தாக்கம் வாய்ந்த ஆய்வுமுறைகள் பயன்படுத்துவது, ஆராய்ச்சியின் தாக்கத்தையும், ஆழமான ஈடுபாட்டையும் மேம்படுத்துவதுடன் பல்வேறு பார்வையாளர்களிடையே புரிந்துணர்வினையும் ஏற்படுத்தும்.
- **பங்கேற்பு மற்றும் கலை அடிப்படையிலான முறைகளை வரைதல்:** சமூகங்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் செயலாக்குவதற்கும் கிடைக்கும் வெளியினை எளிதாக்குவதற்கும் நெறிமுறை மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆராய்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் இந்த முறைகள் மோதலால் பாதிக்கப்பட்ட சூழல்களில் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.
- **தரவு சேகரிப்பு முயற்சிகளை மேம்படுத்துதல்:** குறிப்பாக பலவீனமான மற்றும் குறைந்த வருமான மக்கள் வாழும் சூழ்நிலைகளில் முக்கியமான இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கு சமூக நல்வாழ்வு மற்றும் மீளுந்தன்மை பற்றிய மதிப்பீட்டை மேம்படுத்தும் நோக்கில் தரவு சேகரிப்பிற்காக அதிக முதலீடு அவசியமானதாகும். பாலினம், வயது மற்றும் பிற முக்கிய ஒன்றிலொன்று தொடர்பட்ட பிரிவுபடுத்தப்பட்ட தரவு அவசரமாக தேவைப்படுகிறது.

# முன்னோக்கி புதிய வழிகள்


> **"**
>
> **உங்களுக்குள் வாழ முடியாத உலகங்களை நீங்கள் சிதைப்பது போல், நீங்கள் இல்லாமல் வாழ முடியாத உலகங்களை கற்பனை செய்து வடிவமைக்க நினைவில் கொள்ளுங்கள். "**
>
> ரூஹா பெங்கமின், கற்பனை: ஒரு விஞ்ஞாபனம், 2024.

பாலின நீதி மற்றும் அனைவருக்கும் நன்மைபயக்கும் அமைதிக்காக உழைக்கும் கல்விமான்கள், பயிற்சியாளர்கள், சட்டம் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோருக்கு அறிக்கையின் பிரிவு மூன்று புதிய வழிகளை வழங்குகிறது. அத்தியாயம் பத்து மையத்தையே மாற்றத்திற்கான ஒரு முன்மாதிரியாக ஆராய்வதற்கு முற்படுகின்றது - அதன் பல்துறைஒருங்கிணைவு, நாடுகடந்த மற்றும் கூட்டுப் பெண்ணிய நடைமுறை எவ்வாறு ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் தீர்க்க முடியாத சவால்களை எதிர்கொள்வதில் ஏற்படும் முன்னேற்றங்களை ஆதரிக்கும் என்பதைக் காட்டுகின்றது. மையத்தின் பெண்ணிய மாதிரியின் அனுகூலங்கள், பலவீனங்கள், சவால்கள் மற்றும் இடரபாயங்கள், நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவை ஆராயப்படுகின்றன. அத்துடன் அடையாளம் காணப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு இரண்டு உத்திகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன: 1) முழுமையான பெண்ணிய ஆராய்ச்சியினை நுணுக்கமாக பரிசீலனை செய்தல்; மற்றும் 2) உராய்வை எதிர்நோக்குதல் மற்றும் ஆர்வம் காட்டுதல். துறைகள், தேசிய-அரசுகள் மற்றும் கல்வியாளர்-திட்டங்களை நடைமுறைப்படுத்துவோரை உள்ளடக்கி கட்டமைப்புக்கள் உருவாக்கப்படும்போதுதான் மையம் போன்ற வலையமைப்புக்கள் ஆணாதிக்கம், முதலாளித்துவம், காலனித்துவம் மற்றும் இராணுவவாதத்தின் தொடர்பை எதிர்கொள்ள முடியும்.

ஆராய்ச்சியை வடிவமைப்பிலிருந்து ஆராய்ச்சி முடிவுகளை பரவல்செய்யும் வரை பெண்ணியத்தின் முழு ஆராய்ச்சி பயன்பாட்டின் விழுமியத்தினை மையத்தின் தொழிற்பாடு நிரூபிக்கிறது. பெண்ணிய நெறிமுறைகள் ஒரு பன்மைத்துவ அறிவியலியல் நிலைப்பாட்டுடன் இணைந்து, மையத்திற்குள் பல இடங்களில் பெண்ணியம் தோன்றுவதற்கான இடத்தை உருவாக்கியுள்ளது. மையமானது ஒரு வலை-நெசவு சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். மையத்தின் அனுபவம் எதிர்பார்க்கையின் முக்கியத்துவத்தையும் உராய்வை எவ்வாறு கையாளுவது என்பதனையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வெளிப்புற அச்சுறுத்தல்களும் சவால்களும் உள் கருத்து வேறுபாடுகளும் தகராறுகளை எதிர்கொள்வதற்கான தெளிவான ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆதரவு கட்டமைப்புகளில் வேரூன்றிய ஆக்கபூர்வமான மோதல் கலாச்சாரத்தின் வளர்ச்சியில் முதலீடு செய்வதன் மூலம் பெண்ணிய ஆராய்ச்சியாளர்கள் உராய்வுக்குத் திட்டமிட வேண்டும். அவ்வாறு செய்யும் போது, உராய்வு ஒரு ஆக்கபூர்வமான சக்தியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு ஒற்றுமையும் அன்பான பொறுப்புக் கூறல் செயல்முறையும் தேவைப்படுகிறது: சவால்களை ஒளிரச் செய்யும் மற்றும் புதிய சாத்தியங்களை வெளிப்படுத்தும் ஒரு படைப்பு ஆற்றல்.

அத்தியாயம் 11 மையத்தின் ஒட்டுமொத்த பார்வையை ஆராய்வதுடன் பாலின அடிப்படையிலான உரிமைகளால் வகைப்படுத்தப்படும், தீவிரமாக மாற்றப்பட்ட எதிர்காலத்திற்கான நடவடிக்கைக்கு கண்ணியம்; வன்முறை இன்மை; பொருளாதார, இன மற்றும் காலனித்துவ நீதி; கட்டமைப்பு மாற்றம்; சமூக மாற்றத்திற்கான உலகளாவிய இயக்கங்கள்; வலுவான சட்டங்கள் மற்றும் கொள்கைகள்; அனைவருக்கும் நன்மைதரும் சமாதானம்; உயர் மட்ட நம்பிக்கை; நியாயத்துவமான அரசியல் மற்றும் நம்பிக்கையின் முக்கியத்துவம் என்பவற்றினை உள்ளடக்கிய நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கிறது. நாம் கற்பனை செய்யும் எதிர்காலத்தை நோக்கிய பாதையை விளக்கும் மையத்தின் கூட்டுப் பணியில் இருந்து உருவான ஒன்பது கொள்கைகளை அத்தியாயம் கொண்டுள்ளது. தத்துவங்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

.



# மைய வாரியான பிரதிபலிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

| | | |
|---|---|---|
| மேலும் கேளுங்கள் | பாலினம் பற்றி தொடர்ந்து பேசுங்கள் | கட்டமைப்பு பிரச்சினைகளுக்கு பெயரிடுங்கள் |
| பெண்ணிய வலைகளை நெசவு செய்யுங்கள் | உராய்வை எதிர்பார்ப்பதுடன் அதில் ஆர்வம் காட்டுங்கள் | மையச் செயல்பாடு |
| அமுலாக்க இடைவெளிகளை நிவர்த்திசெய்துவிட்டு | கலை மற்றும் கலாச்சாரத்தை உள்ளடக்கவும் | ஆதாரத் தளத்தை விரிவுபடுத்தி, இணைப்பதுடன் தொடர்பு கொள்ளவும் |

## 1. மேலும் கேளுங்கள்

முதலில், பாலின அநீதி மற்றும் பாதுகாப்பின்மையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களைக் கேளுங்கள்.

பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் அவர்களின் குரல்கள் மற்றும் வாழ்ந்த அனுபவங்களை மையப்படுத்தி பாலின நீதிப் பணிகளில் முன்னணியில் இருக்க வேண்டும். மேலும், தற்போதுள்ள பாலின நீதி வலையமைப்புக்கள் மற்றும் அது போன்ற பரந்த அளவிலான கண்ணோட்டங்களைக் கேட்க வேண்டிய அவசியம் உள்ளது. கேட்பது மட்டும் போதாது என்றாலும், மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை மையமாகக் கொண்டு, சமூக மாற்றத்தின் செயல்பாட்டிற்கு பங்குதாரர்களின் பரந்த கூட்டணியை இணைத்து அனைவரையும் உள்ளடக்கிய அமைதியைக் கட்டியெழுப்பும் செயல்முறைக்கு இது ஒரு முக்கியமான வழியாகும்.

## 2. பாலினம் பற்றி தொடர்ந்து பேசுங்கள்

பாலினத்தை தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள் அத்துடன் தனிப்பட்ட முறையில், அரசியல் ரீதியாக மற்றும் தொழில் ரீதியாக அதை முன்னிலைக்குக் கொண்டு வாருங்கள்.

சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கம், ஆராய்ச்சி மற்றும் செயல்பாடு போன்ற சூழல்களில் பாலினத்தைப் பற்றி பேசுவது சீர்குலைவை ஏற்படுத்தும். ஆனால் அத்தகைய சீர்குலைவு அவசியமானது என்பதுடன் சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை கொண்டு வருவதற்கு பயனுள்ளதாக இருக்கும். பாலினத்தைப் பற்றி பேசுவது, நீடித்த மற்றும் கடுமையான பெண்ணிய எதிர்ப்பு இயக்கங்களின் எழுச்சிக்கு மத்தியில் கவனமும் வளங்களும் திசைதிருப்பப்படும்போது

பாலினம் ஆயுதமாக்கப்பட்டதுடன் ஆணாதிக்கத்தைப் பற்றிய விமர்சனப் பேச்சுகள் மௌனமாகிவிட்டன.

## 3. கட்டமைப்பு பிரச்சினைகளுக்கு பெயரிடுங்கள்

ஆணாதிக்கம், முதலாளித்துவம், காலனித்துவம் மற்றும் இராணுவவாதம் ஆகியவற்றின் பிரச்சனைகள் அதிகார மண்டபங்களில் பெயரிடப்பட வேண்டும், ஏனென்றால் சொல்லப்படாதவை பெரும்பாலும் மறுக்கப்படாமலும் கேள்விக்குள்ளாக்கப்படாமலும் இருக்கக்கூடும்.

பெண்ணிய புலமைப்பரிசில், மொழியின் முக்கியத்துவங்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகளைப் பற்றி நாம் கூறும் கதைகள் நமது சமூக உலகங்களையும் கற்பனைகளையும் எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைப் பற்றிய தத்துவார்த்த மற்றும் நடைமுறை நுண்ணறிவுகளை நீண்ட காலமாக மேம்படுத்தியுள்ளதுடன் அது நாம் சிந்திக்கும் மற்றும் செயல்படும் விதத்தை பாதிக்கிறது. ஆணாதிக்கம், முதலாளித்துவம், காலனித்துவம் மற்றும் இராணுவவாதத்தின் தீர்க்கமுடியாத மற்றும் ஒன்றோடொன்று இணைந்த கட்டமைப்பு வன்முறைகளை நிவர்த்தி செய்வதற்கு பாலின நீதிக்கான இலக்கணம் மற்றும் இந்த வன்முறைக்கு நேரடியாக பெயரிடக்கூடிய அரசியல் விருப்பம் தேவையானதாகும்.

## 4. பெண்ணிய வலைகளை நெசவு செய்யுங்கள்

ஆணாதிக்கம், முதலாளித்துவம், காலனித்துவம் மற்றும் இராணுவவாதம் ஆகியவற்றின் தீர்க்க முடியாத சவால்கள் ஒன்றையொன்று சார்ந்துள்ளதுடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கையாள்வதற்கான அணுகுமுறைகள் ஒன்றிலொன்று தொடர்பட்டதாகவும், ஒத்திசைவுடையதாகவும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும்.

இணைய நெசவானது இணைப்பதில் கவனம் செலுத்துகிறது. ஒன்றிலொன்று தொடர்புபட்ட பகுப்பாய்வு, நாடுகடந்த கூட்டாண்மை, பல்துறைஒருங்கிணைவு முறைகள் மற்றும் அறிஞர்கள், பயிற்சியாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் சட்டம் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் பல துறை ஒத்துழைப்புகள் மூலம் பல முன்னோக்குகள் மற்றும் அணுகுமுறைகளை ஒன்றிணைக்கிறது. ஆராய்ச்சி செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்ணிய சிந்தனை மற்றும் நடைமுறையின் முழுமையான பயன்பாட்டின் மதிப்பையும், கவனிப்பு மற்றும் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான பெண்ணிய நெறிமுறைகள் முக்கியமாக இருக்கும் வழிகளையும் இது சுட்டிக்காட்டுகிறது. மையம் போன்ற பெரிய அளவிலான பாலின நீதித் திட்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை பல்வேறு அளவுகளில் முன்னோக்கி நகர்த்துவதை உறுதிசெய்ய, நன்கொடையாளர்கள் மற்றும் நிதியளிப்பு அமைப்புகளுடன் ஈடுபடுவதில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 5. உராய்வை எதிர்பார்ப்பதுடன் அதில் ஆர்வம் காட்டுங்கள்

பெண்ணிய ஆராய்ச்சியானது வெளிப்புற அச்சுறுத்தல்கள், சவால்களைத் தணித்தல், தடுப்பது என்பவற்றுடன் உள் பதட்டங்களையும் முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான ஈடுபாட்டினை வேண்டிநிற்கின்றது.

பெண்ணிய ஆராய்ச்சியாளர்கள் வெளிப்புற சவால்கள் மற்றும் எதிர்ப்பை முன்கூட்டியே எதிர்பார்க்க வேண்டும் என்பதுடன் இலக்கை அடைய சரியான வழியைத் தேர்ந்தெடுக்கவும் வேண்டும். திட்டம் மற்றும் இடரபாய முகாமைத்துவத்தில் முதலீடு செய்யும் நேரம், நிதி மற்றும் நிபுணத்துவம், மற்றும் மிகவும் நேரடியாக பாதிக்கப்பட்ட திட்டங்கள், நிறுவனங்கள், நிதியளிப்பவர்கள் அத்துடன் சமூகங்களுக்கு இடையே இருக்கும் ஆற்றல் இயக்கவியல் மற்றும் உறவுகளை பகுப்பாய்வு செய்தல் ஆகியவை இதில் அடங்கும். வெற்றிகரமான பெண்ணிய ஆராய்ச்சியானது, பெண்ணிய நெறிமுறைகளை மையப்படுத்தி, உறவுகளின் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டு, அன்பான பொறுப்புணர்வோடு சமரசம் மற்றும் எதிர்ப்பை வழிநடத்துதலுடன் ஆக்கபூர்வமான மோதல் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம் உள் சவால்களுடன் ஈடுபாட்டினையும் கொண்டுள்ளது.

## 6. மையச் செயல்பாடு

பெண்ணியச் செயற்பாட்டை அங்கீகரித்து ஆதரிப்பதுடன் பாலின நீதி ஆராய்ச்சி, செயல்பாடு, சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றின் மையப்பொருளாக அதை வைக்கவும்.

அடிமட்ட பாலின நீதி செயல்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்கு நிதியளிக்கப்பட்டு பாதுகாக்கப்படவும் வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய சமாதானத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான சமூக மாற்றத்திற்கு ஒரே நேரத்தில் மேலிருந்து-கீழ் நோக்கிய மற்றும் கீழிருந்து-மேல் நோக்கிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. அவ்வாறு செய்வதற்கு உள்ளூர், தேசிய மற்றும் நாடுகடந்த சமூக அமைப்பில் முதலீடு தேவையானதாகும். அத்தகைய வகிபாகங்கள் மதிப்புமிக்க உழைப்பாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு உறுதியான மற்றும் நிலையானதாக இருக்கக்கூடிய செயலாகவும் பார்க்கப்பட வேண்டும்.

## 7. அமுலாக்க இடைவெளிகளை நிவர்த்திசெய்துவிட்டு செயற்பாட்டுக்கு நிதியளிக்கவும்

மொழி முக்கியம், ஆனால் செயல் அதைவிட முக்கியமானதாகும்.

சில விடயங்களில் புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் அவசியமாக இருந்தாலும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் பெண்கள் சமாதானம் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் உட்பட தற்போதுள்ள சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை முழுமையாக செயல்படுத்துவது பாலின நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அமைதிக்கான முன்னேற்றத்தை கணிசமாக துரிதப்படுத்தும். இதற்கு அதிக அர்த்தமுள்ள நிலையான மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த நிதி தேவைப்படுகிறது. அதிகாரத்தில் இருப்பவர்களிடமிருந்து வரும் பாலின நீதி பற்றிய வாய்ச்சவடால்கள் பெரும்பாலும் உறுதியான கொள்கை அமுலாக்கம் மற்றும் போதுமான நிதி மூலம் யதார்த்தமாக மாறத் தவறிவிடுகின்றன. பாலின நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அமைதியை உணர்வதற்கு நடவடிக்கை தேவை என்பதுடன் அவ்வாறான நடவடிக்கைக்கு வளங்களும் தேவையானதாகும்.

## 8. கலை மற்றும் கலாச்சாரத்தை உள்ளடக்கவும்

கலை மற்றும் கலாச்சாரம் பாலின நீதி மற்றும் பாதுகாப்பு பணியின் முக்கிய கூறுகள் என்பதுடன் திட்டங்கள், பிரச்சாரங்கள் மற்றும் மாற்றத்தின் கோட்பாடுகளில் அவை அர்த்தமுள்ள வகையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

கலை மற்றும் கலாச்சார நடைமுறைகள் பாலின நீதிப் பணியின் மூலோபாய கூறுகளாகக் கருதப்பட வேண்டும். இது படைப்பாற்றல் வல்லுநர்கள் மற்றும் பரந்தளவிலான பொதுமக்கள் உட்பட பல்வேறு பார்வையாளர்களை ஈடுபடுத்த பயன்படுத்தப்படலாம். கலை மற்றும் கலாச்சார அணுகுமுறைகள் கல்வி, பகுப்பாய்வு, செயலாக்கம், குணப்படுத்துதல், இணைத்தல், வெளிப்படுத்துதல், பரப்புதல், நீதியைத் தேடுதல், சமூக மாற்றத்தை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் புதிய தீவிரமாக மாற்றப்பட்ட எதிர்காலத்தை கற்பனை செய்வதற்கு சூழலுக்கேற்ப எதிர்வினையாற்றக்கூடியதும் பல பரிமாண வழிகளாகவும் இருக்கலாம். கலைகள் தேவையானவை, வெறும் மேலதிகமானவை அல்ல.

## 9. ஆதாரத் தளத்தை விரிவுபடுத்தி, இணைப்பதுடன் தொடர்பு கொள்ளவும்

செயற்றிறனுடையதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் அதிகளவிலான பாலின ரீதியில் பிரிக்கப்பட்ட தரவு, நியாயத்துவமான அறிவு பரிமாற்ற கூட்டாண்மை, மற்றும் ஆராய்ச்சி தகவல் தொடர்பு உபாயங்கள் ஆகியவை இணைந்தாக அதிகளவிலான பெண்ணிய ஆராய்ச்சிகள் தேவையானதாகும்.

# செயற்பாட்டுக்கான நாடு குறித்த அழைப்புகள்

தீவிரமான, பொருண்முதல் மாற்றத்தை கொண்டு வருவதற்கும் மோதலில் பாதிக்கப்பட்ட சமூகங்களிலும் அதற்கு அப்பாலும் உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கும் மையத்தின் ஒன்பது கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மையத்தின் திட்டங்களின் கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சி மைய நாடுகளுடன் தொடர்புடையவை என்பதுடன் அவற்றிலிருந்து பெறப்படும் பரிந்துரைகள் அத்தியாயம் 3 இல் விரிவாக விவாதிக்கப்பட்டு கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## ஆப்கானிஸ்தான்



பட உதவி: Unsplash பயன்படுத்தலுடன் ஃபரித் எர்ஷாத்

ஆகஸ்ட் 2021 இல் தலிபான்கள் கையகப்படுத்தப்படுவதற்கு முன்பு, ஆப்கானிஸ்தானில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் முக்கிய கண்டுபிடிப்புகள் உடல் மற்றும் பொருளாதார பாதுகாப்பின்மை என்பவற்றுடன் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது வாழ்வாதாரம் மற்றும் சமூகம் இரண்டையும் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் தொடர்ந்து உருவாக்கும் வழிகளில் கவனம் செலுத்துகின்றன. சுகாதாரம், சமூக தனிமைப்படுத்தல், சட்ட நிலை என்பவற்றுடன் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களைப் பெறுதலின் அடிப்படையில் ஆப்கானிஸ்தான் மக்கள் மீதான இடப்பெயர்வின் பல பாலின பாதிப்புகளையும் இந்த திட்டங்கள் ஆவணப்படுத்துகின்றன. இருப்பினும், தலிபான் கட்டுப்பாட்டின் கீழ், பெண்களின் உரிமைகள் மற்றும் பொது வாழ்வில் அவர்கள் பங்கேற்பது தொடர்பான ஆட்சியின் கொடூரமான கொள்கைகள் காரணமாக இந்த பரிந்துரைகளில் பலவற்றை யதார்த்தமாக நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. இருந்தபோதிலும் எதிர்காலத்தில் வாதாடுவதற்கு ஒரு கட்டமைப்பை வழங்கவும், செய்த செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும், முன்பும் இப்போதும் பெண்களின் வாதாடலை முன்னிலைப்படுத்தவும் அவை இங்கே பகிரப்படுகின்றன.

### பரிந்துரைகள்

**ஆகஸ்ட் 2021 வரையிலான பரிந்துரைகள்**

**ஆப்கானிஸ்தான் அரசாங்கம்:**

- **பொருளாதார வலுவூட்டல்:** குறிப்பாக கைவினைத் துறையில்
- **இடம்பெயர்ந்த பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான திட்டங்களை உருவாக்கி ஆதரித்தல்.**
- **கல்வித் திட்டங்கள்:** இளவயது திருமணத்தைத் தடுக்கவும், பெண் கல்வியை மேம்படுத்தவும் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- **கல்வியில் பாகுபாட்டைக் குறைத்தல்:** பாலினம், இனம் மற்றும் மொழி அடிப்படையிலான பாகுபாட்டை எதிர்த்துப் போராட சமூகக் கல்விக் கொள்கை மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்து திருத்துதல்.
- **மனநலச் சேவைகள்:** இந்தச் சமூகங்கள் மற்றும் அவர்களில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான தனித்துவமான அழுத்தங்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைக்கக்கூடிய மனநலச் சேவைகளை உருவாக்குதல்.

**ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள்:**

- **பெண்களின் ஆரோக்கியம்:** பிறப்புக்கு முந்தைய மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகள் உட்பட பெண்களின் சுகாதார முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.
- **அடிப்படைத் தேவைகள் மற்றும் சுகாதாரம்:** சுகாதார நெருக்கடிகளைத் தணிக்க சுத்தமான நீர், சுகாதார வசதிகள் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான வழிகளை வழங்குதல்.
- **அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான வாதாடல்:** குறிப்பாக பெண்களை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தும் அதே சமயம் தற்போதுள்ள தொடர்புடைய திறன்கள் மற்றும் அனுபவமுள்ள ஆப்கானிஸ்தான் மக்களுடன் ஈடுபாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆப்கானிஸ்தானில் அமைதி செயல்முறைகளுக்காக வாதாட வேண்டும்.
- **உரிமைகள் மற்றும் நீதியைப் பெறுதல் பற்றிய விழிப்புணர்வு:** பெண்களின் உரிமைகள் மற்றும் அகதிகள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதலுடன் அவற்றை பெறுவதற்கு ஆதரவை வழங்குதல்.

**வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள்:**

- **ஆப்கானிஸ்தானுக்குள்ளும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஆப்கானிய நிபுணர்களை ஈடுபடுத்தவும், ஒழுங்கமைக்கவும் மற்றும் அணிதிரட்டவும்:** தாயகத்திலும் பிராந்தியத்திலும் ஆப்கானிஸ்தானியர்களை ஆதரிப்பதற்கு ஐ.நா மற்றும் ஆப்கானிய அகதிகளைக் கொண்டிருக்கும் நாடுகள், ஆப்கானிய புலம்பெயர் அமைப்புக்கள், ஆப்கானிஸ்தான் நிபுணர்களை அடையாளம் காணவும், அவர்களின் சமூக, மனித, கலாச்சார மற்றும் பொருளாதார மூலதனத்தை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்துவது என்பதைத் தீர்மானிக்கவும் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

- **ஸ்தம்பிதமடைந்த அமைதிச் செயல்முறையை ஊக்குவிப்பதில் அழுத்தங்களைப் பிரயோகிக்கவும்:** சர்வதேச சமூகம் தாலிபான்கள் மீது எந்தச் செல்வாக்கினைச் செலுத்தியேனும் தடைப்பட்ட அமைதி செயல்முறையைத் தொடங்கவும் பெண்கள் உட்பட சமூகத்தின் அனைத்து அம்சங்களுடனும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- **இன்னும் சாத்தியமான வேலைகளில் கவனம் செலுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்கும் விளக்கத்தினை மாற்றவும்:** தற்போதைய சூழ்நிலையில், நிதி மதிப்பை உருவாக்குவதற்கு பெண்கள் தங்கள் திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இன்னும் உள்ளன. பெண்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் மீதான ஆழமான மற்றும் நீடித்த தாக்குதல்கள் இருந்தபோதிலும், குறிப்பாக அவர்கள் வீட்டிற்குள் இருக்க அனுமதிக்கும் முறை நீடிக்கையில் பெண்கள் தொடர்ந்து வேலை செய்கிறார்கள். இந்த வேலையை வலுப்படுத்த, ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகப் பாதைகள் இன்றியமையாதவை. கைவினைப் பொருட்கள் போன்ற பொருட்களை வருமானம் ஈட்டுவதற்காக நாட்டை விட்டு கொண்டு செல்வதற்கு இந்த வர்த்தக வழிகளைப் பராமரிக்க சர்வதேச நிறுவனங்கள் செயல்பட வேண்டும். பெண்கள் வருமானம் ஈட்டக்கூடிய பணிகளுக்கு அரசு சாரா நிறுவனங்கள் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும்.

- **அரசியல் செயல்முறைகளில் பெண்களை உள்ளீர்ப்பதனை சேர்ப்பது மற்றும் வாதிடுவது:** ஆப்கானிஸ்தான் பெண்கள் சர்வதேச சமூகத்தால் நடத்தப்படும் தங்கள் தேசத்தின் எதிர்காலம் பற்றிய உரையாடல்களில் இருந்து நீக்கப்படும் இடரபாயம் உள்ளது. வரவிருக்கும் ஆண்டுகளில் தலிபான்களின் சாத்தியமான அங்கீகாரம், இந்த நீக்கத்தினை எதிர்கால சந்ததிப் பெண்கள் செலுத்தக்கூடிய ஒரு பெரிய விலையாக மாற்றும். அனைத்து நன்கொடையாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் தங்கள் வாதங்கள் மற்றும் கொள்கையின் மையமாக அனைத்து பாலினங்களின் சமத்துவத்தை பேணவேண்டும்.

- நெருக்கடிக்கான பதில்கள் பாலினம் சார்பாக தெளிவற்று இருப்பதுடன் ஒன்றிலொன்று தொடர்புபட்ட ஏற்றத்தாழ்வுகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். 2021 இன் நெருக்கடியானது, வெளியேற்றம் மற்றும் மனிதாபிமான விசாக்கள் பெறுதல் மற்றும் தொடர்புடைய பாதுகாப்பு உள்ளிட்ட பாலினத்தைக் கவனத்திற் கொள்ளாத பாதுகாப்புக் கொள்கைகள் பாலினம் தொடர்பில் தெளிவற்றவை என்பதைத் தெளிவுபடுத்தியது. தொடர்புடைய மீள்குடியேற்றத் திட்டங்களும் ஆப்கானிஸ்தானில் உள்ள ஒன்றிலொன்று தொடர்புபட்ட ஏற்றத்தாழ்வுகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததைக் காட்டுகின்றன. மையத்தின் பாலினம் தொடர்பான ஒன்றிலொன்று தொடர்புபட்ட நெருக்கடி கருவித்தொகுப்பினைப் புரிந்து கொள்வதில் உள்ள இந்த இடைவெளியை நிவர்த்தி செய்து ஏனைய பிற சூழல்களில் பயன்படுத்தப்படும் வண்ணம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

## கொலம்பியா




பட உதவி: ஐநா பெண்கள் (CC BY-NC-ND 2.0)

கொலம்பியாவில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறையின் பல்வேறு அம்சங்களின் தாக்கத்தை ஆய்வு செய்கின்றன. நாட்டில் பெண்களின் அரசியல் மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கான வரம்புகள், நிலைமாறுகால நீதி நிறுவனங்கள் வழங்கும் குறியீட்டு இழப்பீடுகள் மற்றும் சமூகங்களுக்குத் தேவையான பொருள் இழப்பீடுகள், மீள் ஒருங்கிணைப்பின் சவால்கள் மற்றும் காலனித்துவத்தின் நீண்டகால மரபுகள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை இந்தத் திட்டங்கள் ஆராய்கின்றன. நிலத்தை மீட்டெடுக்கும் செயல்முறை பெரும்பாலும் மெதுவாகவும் குறைபாடுடையதாக இருப்பதையும், பெண்களின் உரிமைகள், வலுப்படுத்தல் மற்றும் பாலின சமத்துவத்திற்கான சர்வதேச நிதியுதவி மற்றும் கவனம் செலுத்துவதில் சரிவு ஏற்பட்டுள்ளதையும் அவை கண்டறிந்துள்ளன.

## சிபாரிசுகள்

கொலம்பிய அரசாங்கம்:

- **பொறுப்புவாய்ந்த நல்லிணக்கக் கொள்கைகள்:** மோதலின் தனிப்பட்ட அனுபவங்களின் சிக்கல்களை அங்கீகரித்து ஒருங்கிணைக்கும் நல்லிணக்கத் திட்டங்களை உருவாக்குதல், குறியீட்டுச் செயல்களுடன் இலக்குடன்கூடிய பொருள் இழப்பீடுகளை வழங்குவதில் கவனம் செலுத்துதல்.
- **கிராமப்புற பெண்களுக்கான பொருளாதார நீதி:** பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் கல்வி மற்றும் நில உரிமைகள் போன்ற கிராமப்புற பெண்களுக்கான ஆதரவு அமைப்புகளை மேம்படுத்துதல்.
- **வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்றிறன்வாய்ந்த நில மீட்பு:** வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனில் கவனம் செலுத்தி நில மீட்பு செயல்முறையை மறுபரிசீலனை செய்து சீர்திருத்தம் செய்தல், சட்ட அமுலாக்கத்தில் நிலையான தன்மையைப் பேணல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட விளைவுகளை உறுதி செய்தல்.
- **நீதி நிறுவனங்களுக்கான ஒன்றிலொன்று தொடர்புபட்ட அணுகுமுறை:** அமைதிக்கான சிறப்பு அதிகார வரம்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கான அலகு மற்றும் உண்மையைத் தெளிவுபடுத்துவதற்கான ஆணையத்தின் கண்காணிப்புக் குழு, சகவாழ்வு மற்றும் மீண்டும் மீண்டும் இடம்பெறாமை ஆகியவை தொடர்பில் முடிந்தவரை தங்கள் செயற்பாடுகளில் ஒன்றிலொன்று தொடர்புபட்ட அணுகுமுறைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மக்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு தீர்வுக்கான பொருத்தமான வழிமுறைகளை வழங்குதல்.
- **நியாயத்துவமற்ற நீதியின் காலனித்துவ மூலங்கள்:** CEV வழங்கிய 74 இறுதிப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை மதிப்பீடு செய்யும் போது, கண்காணிப்புக் குழு, காலனித்துவ மரபுகளின் பின்னணி மற்றும் நல்லிணக்கத்திற்கான கட்டமைப்புக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொள்ளல்.
- **உள்ளூர் தலைமைத்துவம் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான கல்வி:** பழங்குடியினர் மற்றும் ஆபிரிக்க சந்ததியினரின் குரல்கள் நிலைமாறுகால நீதிச் செயல்பாட்டில் மையமாக இருக்க வேண்டும். தங்கள் சமூகங்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுடன் திட்டங்கள் ஒத்துப்போவதை உறுதிசெய்ய, கொள்கை வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தலில் உள்ளூர் தலைவர்களை ஒருங்கிணைத்தல்.
- **நல்லிணக்க எதிர்பார்ப்புகள்:** நல்லிணக்கம், அதன் நோக்கம் மற்றும் அதன் வரம்புகள் ஆகியவற்றை தெளிவுபடுத்தவும் வரையறுக்கவும் தேசிய உரையாடலை நடத்துதல்.

சிவில் சமூகமும் சர்வதேச செயற்பாட்டாளர்களும்:

- **நிலையான மற்றும் நெகிழ்வான நிதி மாதிரிகள்:** பெண்கள் சிவில் சமூக அமைப்புகளுக்கு நீண்டகால ஆதரவை வழங்கும் நிதி மாதிரிகளை உருவாக்குதல். வெற்றிகரமான திட்டங்களைத் தொடரவும் அளவிடவும் மற்றும் மாறிவரும் சூழல் மற்றும் தேவைகளுக்கு பதிலளிக்கும் வழிகளில் வளங்களை ஒதுக்க அனுமதித்தல்.
- **அர்த்தமுள்ள மற்றும் பலதரப்பட்ட பங்கேற்பு:** நிராயுதபாணியாக்கம், அணிதிரட்டல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு முதல் நில உரிமைகள், பொருளாதார வாய்ப்புகள் மற்றும் நிலைமாறுகால நீதி வரை சமாதானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களிலும் - முன்னாள் பெண் போராளிகள், பாதிக்கப்பட்டவர்கள், பூர்வீகக் குழுக்கள் உட்பட - பலதரப்பட்ட மகளிர் குழுக்களின் பங்கேற்பை உறுதி செய்தல்.
- **அடித்தட்டு நிறுவனங்களுக்கான திறனைக் கட்டியெழுப்புதல்:** வளங்களை ஒதுக்கும் போது அது ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் மற்றும் அடிமட்ட அமைப்புகளின் கலாச்சாரத் திறன் மற்றும் உள்ளூர்பற்றிய அறிவுடன் சமூகம் சார்ந்த தேவைகளுக்குப் பதிலளிக்கும் திறனை மேம்படுத்துகிறது. சிறிய மற்றும் அதிக முறைசாரா நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் சமாதான நடைமுறைச் செயல்முறை முழுவதும் பாலின பிரச்சனைகளுக்கு உத்தரவாதம் அளித்தல்.
- **ஒன்றிலொன்று தொடர்புபட்ட மற்றும் முழுமையான பாலின நிகழ்ச்சிப்படுத்தல்:** பாலின வாதத்திற்கான ஒற்றை-பிரச்சினை அணுகுமுறைகளைத் தவிர்க்க வேண்டும். அது தற்போதுள்ள சமூக மற்றும் அரசியல் படிநிலைகளை நிலைநிறுத்தக் கூடும். சிறுபான்மைப்படுத்தப்பட்ட பெண்கள் மற்றும் குழுக்களால் அனுபவிக்கப்படும் ஒடுக்குமுறையின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கட்டமைப்புகளால் நீடித்திருக்கும் வன்முறையில் கவனம் செலுத்த வேண்டும்.
- **நிலைமாறுகால நீதியின் மீதான காலனித்துவ செல்வாக்குகள்:** வரலாற்றுரீதியான காலனித்துவத்தை நிவர்த்தி செய்ய முற்படும் ஆராய்ச்சி காலனித்துவத்திலிருந்து விடுபடுவதற்கான முறைசார் அணுகுமுறையைக் கையிலெடுக்க வேண்டும் என்பதுடன் பழங்குடி மற்றும் ஆபிரிக்க சந்ததி சமூகங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

## குர்திஸ்தான்-ஈராக்



பட உதவி: Unsplash பயன்படுத்தலுடன் லெவி மெய்ர் கிளான்சி

குர்திஸ்தான்-ஈராக் பற்றிய மையத்தின் ஆராய்ச்சியானது அரசியல் மற்றும் சட்ட அமைப்புகளில் தோல்விகள், ஆழமான வேரூன்றிய ஆணாதிக்கம் மற்றும் பாலின ரீதியான எதிர்வினை போன்றவற்றால் பெண்கள் எதிர்கொள்ளும் முன்னேற்றத்திற்கான தடைகளை அம்பலப்படுத்துகிறது. இடம்பெயர்ந்த மக்களை நிர்வகிப்பது பற்றிய உரையாடல்கள் மற்றும் நடைமுறை ஆகிய இரண்டிலும் சர்வதேச கொள்கைகள் மற்றும் உள்ளூர் யதார்த்தங்களுக்கு இடையிலான தவறான ஒருங்கிணைப்பை இந்த திட்டங்கள் நிரூபிக்கின்றன என்பதுடன் நாட்டிற்கு திரும்பிய புலம்பெயர்ந்தோர் அமைதி, அபிவிருத்தி, பாலின சமத்துவம் மற்றும் தொழிலாளர் சந்தைக்கு செய்யும் பங்களிப்புகளை எடுத்துக்காட்டுகின்றன.

### சிபாரிசுகள்

குர்திஸ்தான்-ஈராகின் பிராந்திய அரசாங்கம்:

- **ஆண்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் ஆணாதிக்க நியமங்களை சவாலுக்கு உட்படுத்துதல்:** ஆணாதிக்க நியமங்களை சவால் விடுவதற்கும், வளர்ந்து வரும் பாலின ரீதியான எதிர்வினையினை எதிர்ப்பதற்கும், குறிப்பாக அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தும் உள்ளூர் முயற்சிகளுக்கு நிதி மற்றும் ஆதாரங்களை அதிகரித்தல்.
- **சொந்த நாட்டிற்குத் திரும்பி வருபவர்களுக்கான சாத்தியமான மற்றும் நிலையான கொள்கைகள்:** குர்திஸ்தானுக்குத் திரும்புவதற்கும் பொருளாதார மேம்பாடு மற்றும் அமைதிக்கு பங்களிப்பதற்கும் அதிக நுட்பத்தேர்ச்சி கொண்ட ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நிலையான மற்றும் சாத்தியமான கொள்கைகளை உருவாக்குதல்.
- **புலம்பெயர்ந்தோருடன் இணைந்து செயற்படுதல்:** குர்திஷ் புலம்பெயர்ந்தோரின் மனித, கலாசார, சமூக மற்றும் பொருளாதார மூலதனத்துடன் இணைந்து செயற்படுவதற்கும் அதிலிருந்து பயனடைவதற்கும் ஒரு புலம்பெயர்ந்தோர் விவகாரத் துறையை நிறுவுதல், தொழிலாளர் பற்றாக்குறைக்கான சான்றுகளை அடையாளம் காணுதல், சாத்தியமாகத் திரும்பி வரக்கூடியவர்களின் வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் நிலையான அபிவிருத்திக்கு அவர்களின் சாத்தியமான பங்களிப்பை மதிப்பிடல்.
- **நாடு திரும்பிய பெண்களின் உரிமைகள் மற்றும் பங்களிப்புகளில் கவனம் செலுத்துதல்:** பெண்களுக்கான நேர்மறையான கொள்கைகளை உருவாக்குவதற்கும் நாடு திரும்பிய பெண்களின் திறன்களிலிருந்து பயனடைவதற்கான கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்துவதற்குமான அரசு சாரா பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுதல்.

சர்வதேச செயற்பாட்டாளர்கள்:

- **பாலினத்தை உள்ளடக்கிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்:** இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்துதல் மற்றும் திறன் பெறச் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பாலினம் சார் தேவைகள் மற்றும் சவால்களுக்குக் காரணமான இடப்பெயர்வுக் கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்த பிராந்திய மற்றும் உள்ளூர் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- **கட்டாய இடப்பெயர்வு குறித்த பாலினம் சார் தேவைகளை உணர்ந்து கொள்ளும் பயிற்சி:** இடப்பெயர்வு சூழல்களில் பாலினப் பிரச்சினைகளைப் பற்றிய ஆழமான புரிதலை உறுதிசெய்ய தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் பயிற்சித் திட்டங்களை ஆதரித்து எளிதாக்குவதுடன் பயனுள்ள ஆதரவு அமைப்புகளையும் உருவாக்க உதவுதல்.

உள்ளூர் சமூகங்கள் மற்றும் கல்வியாளர்கள்:

- **சமூகம் தலைமையிலான தீர்வுகள்:** உள்ளூர் தலைவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு பாலின நெறிமுறைகள் பற்றிய விவாதங்களை முன்னெடுப்பதற்கு அதிகாரம் அளிப்பதுடன் இந்தப் பிரச்சினைகளை திறம்பட எதிர்கொள்ள சமூகம் சார்ந்த பிரதிபலிப்புக்களை உருவாக்குதல்.
- **மாற்றத்திற்கான ஒரு கருவியாக கல்வி:** பாடசாலைகள், மசூதிகள் மற்றும் பிற கற்றல் தளங்களின் பாடத்திட்டங்களில் விரிவான பாலின சமத்துவக் கல்வியை ஒருங்கிணைக்கவும். எதிர்கால சமூக நியமங்களை வடிவமைக்க இளைய தலைமுறையினரை ஈடுபடுத்துவது மற்றும் சமூகத்தில் பாலின சமத்துவக் கூட்டாளிகளாக அவர்கள் ஆற்றக்கூடிய நேர்மறையான பங்கை முன்னிலைப்படுத்த ஆண்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்துதல்.
- **கலை அடிப்படையிலான அணுகுமுறைகள்:** பச்சாதாபத்தை வளர்ப்பதற்கும், நிறுவப்பட்ட பாலின விதிமுறைகளை சவால் செய்வதற்கும் பாலின அடையாளங்களின் மறுமதிப்பீட்டை ஊக்குவிப்பதற்கும் கல்வி அமைப்புகளில் படைப்பு மற்றும் கலை அடிப்படையிலான முறைகளை செயல்படுத்துதல்.

## லெபனான்



பட உதவி: Unsplash பயன்படுத்தலுடன் ரத்வான் ஸ்கேய்க்கி

லெபனான் சமீபத்தில் சந்தித்த மூன்று நெருக்கடிகள் (பொருளாதார சரிவு, பெய்ரூட் துறைமுக வெடிப்பு மற்றும் கொவிட்-19 பெருந்தொற்றுநோய்), புறக்கணிப்பை கூட்டியுள்ளமை, குறிப்பாக ஆவணமற்ற சிரிய அகதிகள் தொடர்பில் பல்வேறு பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்ட நபர்களை ஒதுக்குதல், துன்புறுத்துதல் மற்றும் பாகுபாடு என்பவற்றினை லெபனான் தொடர்பான திட்டங்கள் அடையாளங்காண்பதுடன் இந்த சமூகங்களுக்கு உளவியல் சமூக ஆதரவின் பற்றாக்குறை பற்றியும் கவனத்திற் கொள்கின்றன. மூன்று நெருக்கடிகளும் புலம்பெயர்ந்த பெண்கக்கு அளவிக்கு மீறிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடி தன்மையினையினையும் அதிகரித்துள்ளன. இது வேலையின்மை, தனிமைப்படுத்தல், பாலின அடிப்படையிலான வன்முறை சம்பவங்கள் மற்றும் மனித கடத்தல் அதிகரிக்கும் அபாயத்திற்கு வழிவகுத்துள்ளது.

## சிபாரிசுகள்

**லெபனான் அரசாங்கம்:**

- **பாரபட்சமான சட்டங்களை ஒழித்து, சட்டப் பாதுகாப்புகளை வலுப்படுத்துதல்:** தண்டனைச் சட்டத்தில் உள்ள பிரிவு 534 ஓரினச்சேர்க்கைச் செயல்களை குற்றமாக்குகிறது. இதுவும், பாலியல் தொழிலாளிகளை குற்றவாளியாக்கும் பிற சட்டங்களும் ரத்து செய்யப்பட வேண்டும்.
- **புலம்பெயர்ந்த பெண்களுக்கான சட்டப் பாதுகாப்புகளை மேம்படுத்துதல்:** லெபனான் அரசாங்கம் புலம்பெயர்ந்த பெண்களை பொது மற்றும் தனியார் துறைகளில் பாதுகாக்கும் சட்டங்களை இயற்ற வேண்டும் என்பதுடன் அவற்றினைச் செயல்படுத்தி புலம்பெயர்ந்த பெண்களுக்கு பாதுகாப்பையும் நீதியையும் வழங்க வேண்டும்.

**கொள்கை வகுப்பாளர்களும் லெபனானிய அரச சார்பற்ற நிறுவனங்களும்:**

- **ஒன்றிலொன்று தொடர்புபட்ட அணுகுமுறையை அமுல்படுத்துதல்:** லெபனான் கொள்கை வகுப்பாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்டவர்களின்
- அடையாளங்களின் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் கொள்கைகள் மற்றும் ஆதரவு சேவைகளைக் கொண்டுவருவதற்கும் ஒன்றிலொன்று தொடர்புபட்ட அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- **நாடுகடந்த செயல்பாட்டிற்கான ஆதரவு:** லெபனான் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்டவர்களுக்கான இயக்கத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் செயல்திறனை வலுப்படுத்த பிராந்தியம் முழுவதும் உள்ள பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்டவர்கள் தொடர்பான அமைப்புகளிடையே நாடுகடந்த செயல்பாடு மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல்.
- **நிலையான விதத்தில் நிதியுதவியை அதிகரித்தல்:** லெபனானில் உள்ள பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் கொண்டவர்களை மையமாகக் கொண்ட சேவைகளுக்கு, குறிப்பாக மனநலம் மற்றும் உளவியல் ஆதரவிற்கு நிலையான விதத்தில் நிதியை அவசரமாக அதிகரிக்க வேண்டும்.

**அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள்:**

- **சட்டவிரோத பணப்பரிமாற்றல் (கபாலா/உண்டியல்) முறைமையைச் சீர்திருத்தம் செய்தல்:** லெபனான் அரசாங்கம், சர்வதேச அமைப்புகளின் ஆதரவுடன், வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சட்டவிரோத பணப்பரிமாற்றல் முறைமையை அவசரமாக மாற்றியமைக்க வேண்டும்.
- **புலம்பெயர்ந்தோர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்:** பெண் புலம்பெயர்ந்தோருக்கு அனைத்து விதத்திலும் நன்மைபயக்கக்கூடிய பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்குவதற்காக லெபனான் அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை அமுல்படுத்தப்பட வேண்டும்.
- **புலம்பெயர்ந்தோரை மையப்படுத்திய திட்டங்களுக்கான ஆதரவு:** புலம்பெயர்ந்த சமூகங்களுக்கு தொழிற்பயிற்சி, சட்ட உதவி மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்கான சமூக ஆதரவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு லெபனான் அரசாங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் சொந்த நாட்டின் அரசாங்கங்கள்:

- **இருதரப்பு புலம்பெயர்வு ஒப்பந்தங்கள்:** புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களின் சொந்த நாடுகளின் அரசாங்கங்கள் அவர்களின் புலம்பெயர்ந்த குடிமக்களுக்கு நியாயமான நிலைமைகளை வழங்குவதற்கான  நடவடிக்கைகளை எடுத்து லெபனான் அரசாங்கத்துடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றன.

## சியரா லியோன்



பட உதவி: நிலக் கொள்கை, பாலினம் மற்றும் பன்மை சட்ட அமைப்புகள் திட்டம்

சியரா லியோனில் நில ரீதியான நீதியில் கவனம் செலுத்தும் போது காண்பது யாதெனில் வறுமையே நிலத்தினைப் பெறுவதனைக் கட்டுப்படுத்தும் முக்கிய காரணியாக இருப்பதுடன் அதற்கு அடுத்ததாக புலம்பெயர்ந்தவராக இருப்பது அல்லது உள்ளூர் சமூகத்தினைச் சேர்ந்தவராக இல்லாமல் இருப்பதுமாகும்.   இது நிலத்தின் மீதான அவர்களின் உரிமையை கட்டுப்படுத்தும் கலாச்சார ஆணாதிக்க விதிமுறைகளை எதிர்கொள்ளும் பெண்களை அளவுக்கு மீறிய விதத்தில் பாதிக்கிறது. மேலும், பெருநிறுவன உரிமையாளர்கள் சியரா லியோனியப் பொருளாதாரத்தின் தாராளமயமாக்கலைப் பயன்படுத்தி நிலத்தை பெறுவதை மறுக்கவும், பெண்களை அப்புறப்படுத்தவும் செய்கிறார்கள். நீண்ட கால பாலின நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளைத் தடுக்கும் வகையில், சமூக நீதி மற்றும் பெண்களை வலுப்படுத்தலுக்கு மேலாக பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## சிபாரிசுகள்

சியரா லியோன் அரசாங்கம்:

- **கொள்கை சீர்திருத்தம் மற்றும் அமுலாக்கம்:** பெண்களுக்கு சம உரிமை மற்றும் நிலத்தைப் பெறுவதை உறுதி செய்யும் சட்ட மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் வலுப்படுத்தப்பட்டு முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும்.
- **நிலக் கொள்கையும் உள்ளடக்கமும்:** தேசிய நில ஆணையச் சட்டம் (2022) மற்றும் வழமை நில உரிமைச் சட்டம் (2022) ஆகியவற்றில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள முற்போக்கான விதிகளை உள்ளடக்கிய நிலக் கொள்கையை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க வேண்டும். இது சர்வாம்ச ரீதியியிலான நிலச் சட்ட உருவாக்கத்துடன் இணைந்ததாக இருக்க வேண்டும்.
- **பெண்களின் உரிமைகள் மற்றும் பெருநிறுவன உரிமையாளர்களின் நலன்கள்:** பெண்கள் பெருநிறுவன நில நலன்களுடன் முரண்படும்போது அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும். அபிவிருத்தி என்ற பெயரில் பெண்களின் உரிமைகள், நில உரிமைகள் உட்பட சமரசம் செய்ய அனுமதிக்கும் சட்ட ஓட்டைகளை மூடுவதும் இதில் அடங்கும்.
- **சிவில் சமூகம் மற்றும் உள்ளூர் அமைப்புகள்:** நிதி மற்றும் ஈடுபாடு உட்பட மக்களுடன் இணைந்து பணிபுரியும் சிவில் சமூகம் மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

பாரம்பரிய அதிகாரசபைகள்:

- **வழமை பேணும் சட்டம் மற்றும் பாலின சமத்துவம்:** நிலம் மற்றும் நில வளங்களை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் உட்பட தலைமை முடிவெடுப்பதில் பெண்களின் சம பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பதில் கவனம் செலுத்தும் தலைமைத்துவ நிறுவனம் சீர்திருத்தப்பட வேண்டும்.

சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள்:

- **நிலம் சார் நீதி மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்கள்:** பெண்களுக்கு துணைச்சட்டப்பூர்வ மற்றும் தகராறு தீர்வு உதவிகள் அதிகரிக்கப்பட வேண்டும். இதனால் பெண்கள் நில பேரங்களில் நியாயமான பிரதிநிதித்துவம் பெற முடியும் என்பதுடன் அவர்களின் உரிமைகள் மீறப்படும்போது நீதியை அணுகவும் முடியும். கல்வி மற்றும் தகவல் பரிமாறும் புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

## இலங்கை



பட உதவி: Unsplash பயன்படுத்துடன் பிரெட்றிக் ஒஃலாண்டர்

இலங்கை தொடர்பான ஆராய்ச்சி நீதி, நிலம் மற்றும் புலம்பெயர்வு பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களில் உயிர் பிழைத்தவர்களுக்கான நீதியில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருப்பதாகவும் பெண்களுக்கு நீதி கிடைப்பதில் பொதுவான முறைமை குறைபாடுகள் இருப்பதாகவும் திட்டங்கள் கண்டறிந்துள்ளன. நிலத்தில், நில உரிமைகளுக்கான ஒரே மாதிரியான சட்டம் இல்லாதது, வழமைச் சட்டங்களில் உள்ள சிக்கல்கள், இன மத மற்றும் கலாச்சார விதிமுறைகள் மற்றும் போரின் தாக்கம் ஆகியவற்றால் பெண்களின் நில உரிமை பாதிக்கப்படுவதாக மையத்தின் ஆராய்ச்சி காட்டுகிறது. இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் பொருளாதார மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அடைவுகளைக் கொண்டுள்ளனர். அத்துடன் அடிப்படை சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதுடன் நாடு திரும்பிய புலம்பெயர்ந்த பெண்கள் குறிப்பிடத்தக்க பாகுபாடு மற்றும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

### சிபாரிசுகள்

**இலங்கை அரசாங்கம்:**

- **காணாமல் போனவர்களுக்கான நீதி:** காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் மீதான நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளுக்கு முன்னுரிமை அளித்து, இந்த வழக்குகளுக்கு என்ன நடந்தது என்பதையும் விசாரிக்க வேண்டும்.
- **உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு (IDPs) வீடமைப்பு மற்றும் வீடுகளை மீட்டெடுத்தல்:** பணவீக்கத்திற்கு ஏற்ப உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு தற்போதைய நிலம் மற்றும் வீட்டு மானியங்களை அதிகரிக்க வேண்டும். மீள்குடியேற்றம் மற்றும் மாற்றிடத்தில் குடியேற்றுதல் தொடர்பாக பாதுகாப்பு மற்றும் உதவிக்கான கொள்கைகளைத் தெரிவிப்பதற்கு இடம்பெயர்ந்தவர்களின் அனுபவங்களை ஆவணப்படுத்துவதற்கான பணியைத் தொடர்ந்து விரிவுபடுத்தவும்.
- **மோதல் தொடர்பான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுக்கான நீதி (CRSV):** அடிப்படைச் சட்டத்தில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுக்கான சட்ட வரைவிலக்கணத்தினைச் சேர்க்க வேண்டும். மோதல் தொடர்பான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுக்கான வழக்குகளில் ஒப்புதல் மற்றும் உறுதிப்படுத்தல் தொடர்பான சட்ட தரநிலைகளை மதிப்பாய்வு செய்து சாட்சி அறிக்கைகளில் அதிர்ச்சியின் தாக்கத்தை அங்கீகரிக்க வேண்டும். நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பங்கேற்பு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.
- **மோதல் தொடர்பான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுக்கான செயன்முறையில் பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு:** பாலின உணர்திறன் மற்றும் பாதிக்கப்பட்ட-உயிர் பிழைத்தவரின் கண்ணியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்-உயிர் பிழைத்தவர்களுக்கான நீதி தொடர்பான வழக்குகள் மற்றும் மனஅதிர்ச்சி தொடர்பாக காவல்துறை அதிகாரிகள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரிகளுக்கு கட்டாய மற்றும் வலுவான பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
- **நிலத்தினை பெண்கள் அதிக அளவில் பெற்று முழுக் கட்டுப்பாட்டினையும் கொண்டிருக்கும் வண்ணம் தற்போதுள்ள சட்டங்கள் மேலும் திருத்தப்பட்டு முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்:** சமீபத்திய சட்டத் திருத்தங்கள் (அதாவது நில அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்) நடைமுறையில் மதிக்கப்படுவதையும், நிலப் பயன்பாடு தொடர்பான விடயங்களில் முடிவெடுப்பதற்கு பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படுவதையும் அரச அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.
- **நாடு திரும்பும் புலம்பெயர்வை ஊக்குவித்தல்:** பொருளாதார அபிவிருத்தி மற்றும் அமைதிக்கு பங்களிப்பதற்கான அவர்களின் திறனை உணர்ந்து, கூடிய நுட்பத்தேர்ச்சியுடைய நாடு திரும்பியவர்களை ஈர்க்கவும் ஒருங்கிணைக்கவும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.
- **எதிர்கால அமைதி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக்கான ஒருங்கிணைந்த கலந்துரையாடல்:** அமைதி மற்றும் பொருளாதார உரையாடல்களில் அடையாளம் மற்றும் கலாச்சாரம் பற்றிய கருத்தாடல்களை இணைத்தல் வேண்டும். கலை அடிப்படையிலான நடைமுறைகள் மற்றும் ஆராய்ச்சிகள் கொள்கை வகுப்பிற்கு வழிகாட்டக்கூடிய தனித்துவமான நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

சர்வதேச சமூகம்:

- **பாலினத்தை உள்ளடக்கிய கொள்கைகள்:** சர்வதேசம் முதல் உள்ளூர் மட்டம் வரை பாலினத்தை உள்ளடக்கிய கொள்கைகளின் உருவாக்கம், செயல்படுத்தல் மற்றும் தகவல்தொடர்புக்கான ஆதரவு வழங்குதல்.
- **பாலினக் கொள்கையில் ஓரங்கட்டப்பட்ட பெண்களை மையப்படுத்துதல்:** அதிகார அமைப்புகளில் பெண்களை சிறப்பாக ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் இருக்கும் கொள்கைகள், ஓரங்கட்டப்பட்டுள்ள சமூகங்களை மையப்படுத்தி இந்த சமூகங்களைத் தீங்கு மற்றும் வன்முறைக்கு உட்படுத்தும் முறையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மீண்டும் கவனம் செலுத்த வேண்டும்.
- **காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் பொறுப்புக்கூறல்:** காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் முயற்சிகளுக்கு சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆதரவளிப்பது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஊடாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது இன்றியமையாததாகும்.
- **புலம்பெயர் இலங்கையர்களின் சர்வதேச ஈடுபாடு:** பாலின நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமாதானத்தில் கவனம் செலுத்தி புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள நிபுணர்களை ஈடுபடுத்தி அணிதிரட்டல்.
- **பங்கேற்பு மற்றும் கலை அடிப்படையிலான முறைகளுக்கு ஆதரவளித்தல்:** தரவு சேகரிப்பு, கற்றல் மற்றும் முடிவுகளை பகிர்ந்துகொள்வதற்கான தனித்துவமான பங்களிப்புகளுக்காக கலை சார்ந்த ஆராய்ச்சி முறைகளை அங்கீகரித்து நிதி ரீதியாக ஆதரவளித்தல்.

## உகண்டா



பட உதவி: Unsplash பயன்படுத்தலுடன் இடோட் ருபோம்போரா

உகாண்டாவில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மோதலுக்குப் பின்னரான நாட்டின் அனுபவத்தைப் பற்றிய பரந்த அளவிலான கண்டுபிடிப்புகளை வழங்குகின்றன. முன்னாள் பெண் போராளிகள், 'தொடர்ந்து நகர்ந்துகொண்டிருக்கும் மக்கள்', படையினரின் 'தற்காலிகக் குடும்பங்கள்' மற்றும் திரும்பிய பெண்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் தொடர்ந்தும் கடுமையான ஓரங்கட்டப்படுதலை எதிர்கொள்கின்றனர். இது களங்கம், பொருளாதாரப் போராட்டங்கள் மற்றும் சமூக சவால்களுக்கு வழிவகுக்கிறது. ஆணாதிக்க நில உடைமை அமைப்பானது அனைத்து பெண்களுக்கும் குறிப்பாக பெண் முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க சவால்களை உருவாக்குகிறது. இது நில உரிமைகள் மற்றும் பாதுகாப்பின்மை தொடர்பான சர்ச்சைகளுக்கு வழிவகுக்கிறது. முன்னாள் பெண் போராளிகள் நீண்ட கால சுகாதார போதாமையினை இல்லாதொழிப்பதற்கான ஆதரவை எதிர்கொள்வதுடன் மீள் ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்களில் புறக்கணிக்கவும் படுகின்றனர். இது சமூகத்தில் வெற்றிகரமான மீள் ஒருங்கிணைப்பை பாதிக்கிறது. நீட்டிக்கப்பட்ட மோதல்கள் மற்றும் இடப்பெயர்வுகள் நெருக்கமான உறவுகள், உறவு முறைமைகள் மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை கணிசமாக சீர்குலைத்துள்ளன. இது பாதிக்கப்பட்ட மக்களில் பரம்பரை மோதல்களுக்கும் கடுமையான மனநலப் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கிறது.

## சிபாரிசுகள்

அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும்:

- **அரசாங்க ஈடுபாடும் ஆதரவும்:** களங்கம், வன்முறை மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யுத்தத்தின் பின்னர் திரும்பிய பெண்கள் மற்றும் மோதல் காலத்தில் பிறந்த குழந்தைகள் உட்பட விளிம்புநிலை சமூகங்கள் மற்றும் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் மக்களுடன் தொடர்ந்து செயற்பட்டு வலுவான ஆதரவை வழங்க வேண்டும்.
- **சட்ட செயல்முறைகளை எளிமையாக்குதல்:** குறிப்பாக சிறைப்பிடிக்கப்பட்ட

காலத்தில் பிறந்த குழந்தைகளுக்கும் பெற்றோர் அல்லது பிறப்பிடத் தகவல் இல்லாதவர்களுக்கும் சட்ட ஆவணப்படுத்தல் செயல்முறைகளை நெறிப்படுத்துதலானது அரசாங்க சேவைகள் மற்றும் சட்ட உரிமைகளை சிறப்பாக அவர்கள் பெறுவதற்கு உதவுகிறது.

- **நிலச் சீர்திருத்தம் மற்றும் சமூக அறக்கட்டளை:** சமூக நம்பிக்கையை வலுப்படுத்துதல், பாரம்பரிய நிலம் மற்றும் உறவின் முறைகளை எளிதாக்குதல் மற்றும் அனைவருக்கும் குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நியாயமான நிலப் பெறுதலை உறுதி செய்வதன் மூலம் நிலம் தொடர்பான மோதல்கள் மற்றும் நில வணிகமயமாக்கல் மூலம் உருவாகும் சவால்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- **இராணுவ உபாயம் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள்:** அமைதியான மோதல் தீர்வை வலியுறுத்த இராணுவ உபாயங்களை மறுவரையறை செய்ய வேண்டும் என்பதுடன் தற்காலிக குடும்பங்கள் உருவாவதைத் தடுக்கவும் மற்றும் படையினரின் நல்வாழ்வை மேம்படுத்தவும் படையினரைப் பணிக்கமர்த்தும் காலம் மற்றும் பணியமர்த்தல் இடம்பெறும் தடவைகளையும் கட்டுப்படுத்துதல்.

சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்:

- **சர்வதேச செயற்பாட்டாளர்களின் பங்கு:** பாதிக்கப்பட்ட மக்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் சூழல்களில் கவனம் செலுத்தி, ஆயுதமேந்திய குழுக்களுடன் முன்னர் தொடர்புடைய மக்களுக்கு எதிரான களங்கம் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கு பரந்த அளவிலான செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தீவிரமாக தொழிற்பட வேண்டும்.

சமூகங்கள் மற்றும் கலாச்சார நிறுவனங்கள்:

- **போருக்குப் பின்னரான சமூக அடையாளத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்:** சமூக தொடர்பை ஆதரிப்பதற்கான திட்டங்களை உருவாக்குதல், தலைமுறைகளுக்கு இடையேயான உரையாடலை ஊக்குவித்தல் மற்றும் சமூகங்களுக்குள் கூட்டு அடையாளத்தை வளர்த்தல்.

ஊடகம் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகள்:

- **செயற்றிறனாக சமூகத்தினை சென்றடைதல்:** குறிப்பாக கிராமப்புற போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிளவுகளைக் குறைக்கவும், பல்வேறு குடிசனங்களின் ஓரங்கட்டப்பட்ட குரல்களைப் பெருக்குவதற்கும் வானொலி மற்றும் பிற ஊடகங்களை சமூகம் மற்றும் பொது விவாதத்திற்கான கருவிகளாகப் பயன்படுத்துதல்.

சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள்:

- **நீண்ட கால சுகாதாரம் மற்றும் மறு ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்:** முன்னாள் போராளிகள் மீதான மோதலின் நீண்டகால உடல், மன மற்றும் சமூக தாக்கங்களை நிவர்த்தி செய்யும் விரிவான மற்றும் விருப்பத்துடனான மறு ஒருங்கிணைப்பு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.

முழு அறிக்கையைப் படிக்க
**www.TheGenderHub.com**
ஐப் பார்வையிடவும்.





GENDER JUSTICE & SECURITY
A GCRF HUB

UK Research and Innovation